உ

பரமபதிதுணை.

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை நூல்.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப்பிள்ளை அவர்கள்

ஓலையேட்டுப்பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

இதன்விலை] — (ரூ0-1-0

Registered Copy Right.

உ

குருவே துணை.

அகஸ்திய மகா முனிவர்
திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை ௩௱.

மூன்றாவது காண்டம் ௱.

கொந்தளங் குயிலாள் வேதங் கொடுங்கையாற் பாகம் வைத்து
வந்தமெய்ஞ் ஞான தீப மலரொனுஞ் சோதி பாதம்
சொந்தமாய்த் தொழுது போற்றித் துதிபெறப் பாஷை நூலின்
பொந்தவே மூன்றாங் காண்டப் பொருள்தனைப் புகலுவோமே. (1)

பொருளுமுற் காண்டந் தன்னிற் பூட்டினேன் வழலை நாமம்
அருள்பெற உப்பின் தீக்ஷை அறிவித்தேன் ஞானந் தன்னை
இருள்தனை வெளிய தாக இயம்பினேன் ரெண்டாங் காண்டம்
குருமுறை வழலை மார்க்கங் குரியது வகைசொல் வேனே. (2)

சொல்லுவே னிடையின் பாகம் துணிந்தவர் கைபா கங்கள்
வெல்லுவேன் செய்பா கங்கள் வேதமா முனிவர் சித்தர்
மல்லுவேன் மறப்பை யெல்லாம் மனிதர்மே லிரக்கங் கொண்டு
அல்லுவேன் பாஷைநீக்கி அறிவுள்ளோ ரறிந்து கொள்ளே. (3)

அறிந்துகொள் ளாத பேர்கள் அகம்படைத் தவரே மாண்டார்
தெரிந்திடும் நல்லோர்க் கிந்தத் திரைமறை யெல்லாந் தோன்றும்
சொரிந்திடும் பாஷை நீக்கித் தோணுமெய்ப் பொருள்க ளெல்லாம்
வரிந்திட வேணு மென்று வகையது வுரைசெய் வேனே. (4)

உரையது ரெண்டாங் காண்டத் துரையறி பவனே வா[illegible]
நிரையது சிவயோ கத்தில் நிலைத்தவ னவனே யாகும்
புரையது ஒன்று மில்லைப் புரிசடை அரவம் பூண்ட
கரையது அறிந்த யீசன் கனிந்தசொல் மொழிந்தா ரன்றே. (5)

மொழிந்ததொரு சூஸ்திரங்க ளனந்தமுண்டு-மொழியாது யிந்த நூல் கிட்டாதையா, பளிங்கிபலைக் குகைதனிலே வாசஞ்செய்யும்-பரதேசி பெரியோரை யடுத்துக்காத்தால், நளிந்தவரு மனமறிந்து நூலையீவார்-நற்பதவி சேர்வதற்கு வகையுஞ்சொல்வார். குளிந்த வரும் நூல்கொடுக்கும் போதுமக்காள்-குருபதமே கெதியென்று நூலை வாங்கே. (6)

நூல்வாங்கிப் பயனறிந்து துரையைப்பாரு-நுணுக்கமதாய் வினை யம்வைத்துப் பொருளைக்காணு, பால்வாங்கிக் காய்ச்சியுறை மோர் தான்விட்டுப்-பக்குவமாய்த் தயிர்கடைந்து வெண்ணெய்வாங்கி, பால் வாங்கி நெய்யெடுத்த உண்மைபோலே-பதநினைவில லாச்சாஸ்திர வினையம்வைத்து, கோல்வாங்கி நடப்பதுபோற் சுளினைகண்டு-குரு முறையைத் தவறாமற் குறிப்பாய்ப்பாரே. (7)

கற்பத்தின் குணம்.

குறியான கற்பத்தின் குணத்தைக்கேளு-கூறவே யுலகதனிற் சொல்லொண்ணாது, நெரியான மூலமங்கே விள்ளொண்ணாது-நேர றியா மனத்தோரைச் சேர்க்கொண்ணாது, பரியான யீஸ்வரியாள் சாபமீவாள்-பஞ்சமா பாவமதுக் காளாகாதே, மரியான சிவனுடைய சாபம்மக்காள்-மகத்தான கொடுமைவந்து சூழுந்தானே. (8)

சூழுமடா தவமுனிகள் ரிஷிகள்சாரம்-சூழ்ந்துகொண்டா லொரு வராற் றாங்கொணாது, மாழுமடா அவன்குலமு மற்றுப்போகும்-மகத்தான கொடுமுடியும் வேகும்பாரு, ஆழுமடா சாத்திரத்தை வெளிவிடாதே-அன்புள்ள பிள்ளைகளை அழைத்துச்சேரு, வாழுமடா அவன்கிளையும் (ஞான) நெறிதெரிந்து வையகமு மிவனைக்கொண் டாடும்பாரே. (9)

பாரப்பா புவிதனில்வாழ் நிலப்பயிரைப்-பரலோக மினிசனிகைப் பருவம்பார்த்து, நேரப்பா அதுநிறமுஞ் சிவந்தமின்மான்-நேமநிஷ் டை தவமகிமையறிவுள்ளாளாய், காரப்பா மானருகி லிருந்துகொண்டு-கனியவே நாட்பழக்கம் பண்ணிக்கொண்டு, சேரப்பா கேட்டதெல் லா மானுக்கீய்ந்து-செடிபூக்கும் பருவமதிற் பூவைவாங்கே. (10)

நாதவுப்பு.

வாங்கியதோர் பூவதனைப் பீங்கான்றன் னில்-மக்களே கடுரவியில் வைக்கும்போது, தாங்கியதோர் பூரமது வீரயபோடு-தனியுரமு முப்பூவும் புனுகும்போடு, ஏங்கியே திரியாதே சூதநீர்க்கு-இடை சமனாய்த் தானெடுத்து இணக்கம்பண்ணிப், பாங்கியேயிப் பூனீரு சமனிடையாய்ப்-பக்குவமாய்த் தானெடுத்து ரவியில்வையே. (11)

பூனீறுப்பத்தி.

ரவியில்வைத்துக் கிண்டையிலே விளையும்பூனீர்-நவநாளுஞ் சென்றபின்பு சிறுபசளைநீரும், குவியவே முரித்துவிட்டுக் கிண்டும் போது-கொடுஞ்சுருக்கு மூன்றுநா ளானபின்பு, தவியிலே வெடியுப்புச் சாரங்கூட்டிச்-சரியிடையாய்ச் சேர்த்துமே பனியில்வைக்கப், புவியுமே சிவமதனைத் தெளிவுவாங்கிப்-புண்ணியனே வீரமது பூரம் போடே. (12)

போட்டவுடன் முரிந்துநன்றாய்த் தெளிவுமாகும்-புகழ்பெரியபூனீரில் விட்டுக்கிண்டு, நாட்டமுடன் மூன்றுநா ளானபின்பு-நல்லகுடத் தண்ணீரை விட்டுநன்றாய்த், தேட்டமுடன் ரவியில்வைத்து நாலிலொன்று-சேரப்பா பூனீரில் சேர்த்துக்கிண்டு, கூட்டமுடன் கிண்டையிலே கொடியசுண்ணம்-கோதைமலர் பாதமதில் வைத்துப்போற்றே.

போற்றுவது வெகுபதனம் வைத்துப்போற்று-புண்ணியனே வடுகனுக்கும் பூஜைபண்ணு, சாற்றுவது ரவிமதியைச் சுழினைக்கேற்றிச்-சஞ்சார சமாதியிலே நவநாள்வைத்து, ஏற்றுவது அந்தயிடந் திண்ணைபோட்டு-இருந்திடுவாய் சிவபூசை வாரமொன்று, ஆற்றுவது குளிறந்து பூனீருப்பை-அப்பனே யெடுத்திடுவாய் பீங்கான்றனே. (14)

பீங்கானைத் தானெடுத்துப் பூத்தபூவைப்-புண்ணியனே வெகுபதனம் பண்ணிவைப்பாய், நீங்காத பூரமென்றும் வீரமென்றும் நீச்சுநிலை யில்லாத காரமென்றும், தாங்காத சாரமென்றும் வெடியுப்பென்றும்-தன்மையுள்ள யிதற்குவெகு நாமமுண்டு, பாங்கான பொருளல்லோ பூனீர்தானும்-பலவிதமாய்ச் சொல்லுகின்ற நாமந்தானே. (15)

நாமந்தான் சித்தர்வெகு நாமஞ்சொன்ன-நாமமதை வெளிதோணச்சொன்னேன்யானும், சோமந்தான் பரிபாஷைக் கருவைநீக்கிச்-சொன்னதினாற் சித்தரெல்லாங் குகைக்குள்வைத்தார், வாமந்தானவர்தயவு யென்மேற்கொண்டு-வாங்கியே தவமுனிவர்க் கீய்ந்தேன்யானும், சேமந்தான் கருக்குருவு மறிந்துகொண்டு-சின்மயமே பெரிதென்று யிருந்தார்பாரே. (16)

பாரப்பா திங்களொன்றும் கிழங்குதன்னைப்-பக்குவமாய்த் தானெடுத்துக் கொண்டுவந்து, நேரப்பா சலமதனை வாங்கிநன்றாய்-நினைவாகப் பாண்டமதி விட்டுக்கொண்டு, காரப்பா சூடனது யிடையேபோடு-கண்மணியே கும்பிடுகற் சுண்ணம்போடு, கூரப்பா அன்னசத்து உப்புப்போடு-கொண்டிடுவா யமுரியுப்புக் கூடச்சேரே. (17)

சேரடா வெடியுப்புச் சாரஞ்சீனம்-செம்மையுடன் கல்லுப்பு இந்துப்பஞ்சும், வாரடா வகைக்குஒரு பலமதாக-மக்களே சேர்த்து ஒன்றாய் மெழுகுபோலே, காரடா யிடித்துநன்றாய்த் தோண்டும் போது-கண்மணியே கெந்திஒரு பலமும்போடு, பாரடா தாளகமுங் கெவுரிவீரம்-பண்பான வீரமுட னஞ்சுஞ்சேரே. (18)

அஞ்சுமே வகைக்குஒரு பலமதாக-அப்பனே கூடவிட்டு நன்றாய்க்குத்தி, செஞ்சுமே பாண்டமதி லிட்டுமூடி-செடியாக மண்சீலை வலுவாய்ச்செய்து, நஞ்சுமே நாற்சாணுங் குளிதான்வெட்டி-நலமாகப் பாண்டமதை நடுவில்வைத்து, மிஞ்சுமே குளிமூடித் திண்ணைபோட்டு-மேன்மையுள்ள சத்திசிவ பூசைபண்ணே. (19)

பூசைபண்ணி மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு-புண்ணியனே சலமாக நிற்குமப்பா, பாசைபண்ணி அந்நீரை ரவியில்வைக்கப்-படருமடா உப்பதனைப் பதனம்பண்ணு, காசதனைப் பொருளாக யெண்ணவேண்டாம்-கண்மணியே யிந்தஉப்புக் கனகமாகும், நேசம் வைத்து வெகுபதனம் பண்ணவேணும்-நினைவுகொண்டு பூசைமுகம் வைத்திடாயே. (20)

பிரம்ம உப்பின்பேர்.

வைத்துமே யிதற்குவெகு நாமமுண்டு—வையகத்திற் சித்தரெல்லாம் வரிசையாக, நைத்துமே பலவிதமாய்ச் சொல்லிவைத்தார்-நாம்சொன்னேம் பரிபாஷை கருவைநீக்கிக், கைத்துவிடா பிரமமென்றும் பேருமாச்சுக் - கருணையுடன் யான்சொன்னேன் சிவனுஞ் சொன்னார், பைத்துமே யிதினுடைய பெருமைமெத்தப்-பரம்பொருட்குக் குருபதத்தைப் பணிந்துபோற்றே. (21)

போற்றுவது ரெண்டுதிங்கள் கிழங்குதன்னைப் - போதரவாய்க் கொண்டுவந்து சலத்தைத்தானும், ஆற்றுவது சூடனது ரெண்டு போடு-அப்பனே கும்பிடுசற் சுண்ணம்போடு, எற்றுவது அன்னசத்து உப்புப்போடு-என்மகனே அமுரியுப்பு முடியினுப்பு, சாற்றுவது கிழங்குக்கு னிடைக்கிரெட்டி-தான்கூட்டி உரவிலிட்டு மைபோற்குத்தே. (22)

குத்தையிலே வெடியுப்புச் சாரஞ்சீனம்-கொடுத்துவிடு பொரிகாரம் கரியுப்பஞ்சும், முத்தயிலே வகைரெண்டு பலமும்போடு-முன்கருவிற் சேர்த்துநன்றா யிடிக்கும்போது, பத்தயிலே கெந்தியுமே பலமும்ரெண்டு-பார்மகனே தாளகமும் பலமும்ரெண்டு, சத்தயிலே மனோசிலையும் பலமும்ரெண்டு-தான்கெவுரி பலம்ரெண்டு தாக்கிடாயே.

தாக்குவாய் லிங்கமது பலமும்ரெண்டு-தன்மையுள்ள சரக்கெல் லாம் உரலிற்போட்டு, நோக்குவா யிடித்துநன்ருய் மைபோலய்யா-நுண்மையுள்ள பாண்டமதி லிட்டுமூடி, வாக்கிஞற் சொன்னதென்று யெண்ணவேண்டாம்-வந்தெனக்குச் சிறுபிள்ளை வாலைசொன்ஞள், பாக்கியமென் றெண்ணியல்லோ மண்ணுஞ்செய்து-பதிவாகச் சமாது தனில் வைத்துப்போற்றே. (24)

போற்றுவாய் தேவியுட பூசைசெய்துப்-புண்ணியனே சிவபூசை பொருந்தச்செய்து, ஆற்றுவாய் பரதேசிக் கன்னம்போடு-அன்புடனே செய்துகொண்டு அருளைப்பெற்று, சாற்றுவாய் குளிதிறந்து யெடுத் துப்பாரு-சற்குருவைத் தான்போற்று சலமாய்கிற்கும், ஏற்றுவாய் ரவிதனிலே வைக்கும்போது-என்மகனே சத்திசிவ மென்றபேரே. ()

பேருமே யிதற்குவெகு நாமமுண்டு-பெருமையாய்ச் சொல்லி வைத்தார் சித்தரெல்லாம், ஆருமே யிதினுடைய பெருமைமெத்த-அப்பனே வாலைப்பெண் எனக்குச்சொன்ஞள், தூருமே கவர்கோடி தொந்தங்கோடி-சொல்லவொண்ணுத் தொழில்கோடி சுருக்குமெத்த, பாருமே யிதினுடைய பெருமைதன்னைப்-பாடுதற்கு நாவுமுண்டோ பாருபாரே. (26)

பாருநீ மூன்றுதிங்கள் கிழங்குதன்னைப்-பார்மகனே மும்மூர்த்தி யானவேர்தான், காரேநீ கடுமையுள்ள கருவதாகும்-காட்டார்கள் சித் தரெல்லாங் கருவைத்தாஞம், சீரேநீ வெகுகொடுமை யானவேர் தான்-சித்தர்பேச்சுங் கருவாகுஞ் செப்பொண்ணுது, கூறேநீ கடுமை யுள்ள கருவைத்தாஞம்-கூறுகிறேன் திங்களிலே மூன்றுதானே. (27)

திங்களிலே மூன்றுவெகு திறமாம்பாரு-திறமான மும்மூர்த்தி யானவேரை, தங்கயிலே சற்பனைகள் செய்யாமற்ருன்-தனியாக வேர்வெதும்பி வீழுந்ததாஞற், பொங்கமுடன் கொண்டுவந்து சிறு துண்டாக்கிப்-புண்ணியனே அந்திடைக்குப் பூரம்போடு, பங்கமில் லாப் பூமியுட பூனீர்போடு-பதருதே வெள்ளைக்கற் சுண்ணம்போடே.

போடடா வீரமுடன் பூரம்போடு-புண்ணியனே வெடியுப்புச் சாரம்போடு, கூட்டா சரக்கெல்லாஞ் சரியிடையேகொண்டு-கூட்டு வாய் கிழங்கோடே யிடைமூன்ருகும், நாட்டா யிடித்துநன்ருய்ப் பாண்டத்திட்டு-நன்ருக மேல்மூடிக் கவசஞ்செய்து, தேட்டா குளி வெட்டிப் புதைத்துப்போடு-தேவியென்ற மஞேன்மணியைப் பூசை பண்ணே. (29)

பூசையது சிவபூசை சத்திபூசை-புண்ணியனே மண்டலந்தான் செய்துகொண்டு, நேசமது வைத்துநீயோர் மனதுகொண்டு-நின்றிடு வாய் சுழிமுனையின் ஒளிவைப்பற்றி, பாசையது பரிபாஷைக் கருவை யெல்லாம்-பதிவாக நான்வெளியாய்ச் சொல்லிவைத்தேன், மோசமது போகாதே கருச்சொல்லாதே-மூடரிடம் பேசாதே தனித்து நில்லே. (30)

தனித்திருந்து மண்டலந்தான் சென்றபின்பு-தாயான மனோன் மணிக்குப் பூசைசெய்து, அனித்திருந்த உப்பதனை யெடுத்துக் கொண்டு-அப்பனே அரதேசி பரதேசிக்கன்னம், குனித்திருந்து தான்கொடுத்து சிமிழில்வைத்துக்-குணமாகக் குகைதனிலே அடக்கம் பண்ணி, பனித்திருந்த உப்புக்குப் பேர்தானெண்ணு-பார்மகனே மும்மூர்த்தி நாமமாச்சே. (31)

நாமந்தான் வழலைக்கு வெகுபேருண்டு-நானடக்கிச் சொல்லிவைத் தேன் சுருக்கமாக, சேமந்தான் நாலுதிங்கள் கிழங்குமானால்-திற மையது மெத்தவுண்டு கொண்டுவந்து, பூமந்தான் கல்லுரலி விட்டுக் கொண்டு-புண்ணியனே மெழுகதுபோ லிடித்துக்கொண்டு, சோமந் தான் பசளைநீர் படிநால்வாங்கித்-துவளவே பிசைந்துநன்றாய்க் கலக்கி வையே. (32)

கலக்குமுன்னே அன்னசத்து உப்புநாலு-கனியான அண்டத் தின் உப்புநாலு, மலக்குமுன்னே பூமியுட நாதம்நாலு-மைந்தனே வெடியுப்புச் சாரம்நாலு, குலுக்குமுன்னே வீரமொடு பூரம்நாலு-குணமான சிவன்வேம்பு உப்புநாலு, நலக்குமுன்னே கெந்தியொடு தாரம்நாலு-நலமான மனோசிலையும் நாலுமாமே. (33)

நாலுடனே காந்தமொடு சிங்கிநாலு-நன்றான உரம்நாலு லிங்கம் நாலு, காலுடனே யிவையெல்லாம் பசளைநீர்விட்டுக்-கண்மணியே யரைத்துநன்றாய் முன்கருவிற்சேரு, தோலுடனே கலக்கிநன்றாய்ச் சமாதில்வைத்துத்-துடியாக மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு, பாலு டனே உப்புமங்கே படரும்பாரு-படர்ந்தஉப்பைத் தானெடுத்து ரவி யில்வையே. (34)

ரவியில்வைத்துச் சலத்தையெல்லா முப்பாய்வாங்கி-நாள்தோ றும்ரவியில்வைத்துப் பதனமாகக், கவியில்வைத்து உப்பையெல்லாஞ் சிமிழில்வைத்துக்-கண்மணியே வேதஉப்பு யிதற்குநாமம், புவியில் வைத்த கசட்டையெல்லாம் பசளைநீர்விட்டு-போதரவா யாட்டிவில்லை காயவைத்து, பவியில்வைத்து ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால்-பாலகனே முழப்புடத்தில் வைத்திடாயே. (35)

வைத்துமே புடமாறி யெடுத்துப்பாரு - மைந்தனே கும்பிடுகேற்
றிப்பித்தண்ணீர், நைத்துமே விட்டுநன்றா யரைத்துவில்லை-நன்றாகச்
செய்துகொண்டு காயவைப்பாய், மொய்ந்துமே முன்போலே புடத்
தைப்போடு-மொய்குழலாள் கிருபையினாற் சுண்ணமாகும், கைத்து
ப்போ காதுகடுஞ் சுண்ணமப்பா-கண்மணியே கொடிநீரை விட்டு
ஆட்டே. (36)

ஆட்டிநன்றாய் வில்லைதட்டிக் காயப்போடு-அப்பனே சுந்தரமே
புடத்தில்வைப்பாய், தேட்டிலே யிதைவிட்ட தேட்டுமுண்டோ-
தேன்மொழியாள் கிருபையினாற் சுண்ணமாச்சு, பாட்டிலே சொன்ன
தென்று யெண்ணவேண்டாம் - பட்டவிடந் தொட்டவிட மெல்லாம்
பொன்னாம், நீட்டிலே திரியாமற் பதனம்பண்ணு - நினைவுகெட்ட
தோசிகளே காரஉப்பே. (37)

காரமென்றால் வெகுகாரங் கடுங்காரமப்பா - கனிவான உப்புட
னே சாரஞ்சேர்த்து, வீரமென்ற விதுவாகும் செயநீர்வாங்கி-விளங்
கவே சரக்கெல்லாந் துவைத்துவாட்ட, பாரமென்ற சரக்கெல்லா
மெழுகாங்கட்டி-பார்மகனே பரிசேர்த்து மெழுகுபண்ணு, தூரமெ
ன்ற வெள்ளிசெம்பில் நூற்றுக்கொன்று - துடியாகக் கொடுத்திடவே
மாத்துப்பத்தே. (38)

பத்தான உப்பெடுத்துப் பதனம்பண்ணு-பார்மகனே அஞ்சுதிங்
கள் கிழங்குதன்னை, விததான கிழங்கதனை உரலிலிட்டு - விளங்கவே
கடப்பாரை கொண்டுகுத்தி, சத்தான மெழுகுபோல மயனம்பண்ணி-
சுரக்குவகை சேர்க்குகின்ற விபரஞ்சொல்வேன், முத்தான வெடி
யுப்புச் சாரஉப்பு-மொய்குழலா ளிந்துப்புக் கரியுப்பாமே. (39)

கரியுப்பாங் கல்லுப்பு வகைக்கு ஒன்று-கட்டாகப் பலமஞ்சு நிறு
த்துக்கொண்டு, வரியுப்பு வீரமொடு பூரந்தானும்-மக்களே ரசமுட
னே லிங்கந்தானும், செரியுப்பு ரசத்தினுட செந்தூரந்தான் - சேர
அஞ்சும் வகைக்கஞ்சு பலமேபோடு, குரியுப்பாம் கெந்தகமுந் தாளக
முங்கெவுரி-குணமான மனோசிலையுந் தொட்டியாமே. (40)

ஆமப்பா யிவையஞ்சும் வகையொன்றுக்கு-அப்பனே பலமஞ்சு
யெடுத்துக்கொண்டு, போமப்பா காந்தமொடு உரமும் பூனீர் - புகழ்
பெரிய வெள்ளைக்கற் சுண்ணம்போடு, நாமப்பா சத்தியுப்பு முடியி
னுப்பு-கல்லதொரு அமுரியுப்பு சிவன்வேம்புப்பு, வாமப்பா உமுரி
யுப்பு ஒன்பதாச்சு-வளமாக வகைக்கு அஞ்சு பலமுஞ்சேரே. (41)

சேரடா சரக்கெல்லா முரலிலிட்டுச்-செம்மையுடன் முன்கருவிலொக்கப்போடு, வாரடா கடப்பாரை கொண்டுகுத்தி - மைபோலேயிடித்துநன்றாய் மயனம்பண்ணிப், பாரடா பாண்டத்தி லிட்டுக்கொண்டு-பக்குவமாய்ச் சட்டிகொண்டு மூடிநன்றாய், காரடா சீலைமண்ணும் 'வலுவாய்ச்செய்து - கண்மணியே குளிவெட்டிப் புதைத்துப் போடே. (42)

போடவே குழியில்வைத்து மூடிப்போடு-புதுமையுடன் சமாதி மேற் றிண்ணைபோடு, நாடவே வஸ்துசுத்தி வைத்துப்பூசை - நன்றாகக் குருபதத்தை மனதில்வைத்து, தேடவே சிவபூசை சத்தி பூசைச்-செம்மையுடன் மண்டலமே சென்றபின்பு, ஆடவே பரதேசிக் கன்னம்போட்டு-அன்புடனே சமாதிதிறந் தன்பாய்ப்பாரே.(43)

திறந்துபார் பாண்டமதிற் கருதுபோலே-செம்மையுடன் பூக்திருக்கும் பூவைவாங்கி, மலர்ந்ததொரு பூவையெல்லாம் வாரிக்கொண்டு-மகத்தான கசட்டுப்பை மயனம்பண்ணி, கலந்ததொரு வெடியுப்புச் சாரஞ்சேர்த்துக் - கண்மணியே பனிதனிலே வைக்கும்போது, சொரிந்ததொரு வாருதிபோற் செயநீராகும்-சொல்லவொண்ணாச் சலமதனைப் பதனம்பண்ணே. (44)

பதனமுள்ள சலமதனைச் சரக்கிற்றூணும்-பாய்ச்சடா சுருக்கதனைத் தாக்கும்போது, விதனமுள்ள விதனமெல்லாந் தீர்ந்துபோகும்-விள்ளாதே பின்னீர்விட் டாட்டுநன்றாய், மதனமுள்ள வில்லைதட்டிக் காயவைத்து-மக்களே ஓட்டில்வைத்து ஓடுமூடி, சதனமுள்ள மண்ணரிந்து சீலைசெய்து-தப்பாமல் முழப்புடமே வைத்திடாயே. (45)

வைத்தெடுப்பாய்க் கொடியதொரு சுண்ணமாகும் - மைந்தனே வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால், கைத்தெடுத்த சட்டையெல்லாங் கக்கிப்போடும்-கனகமது பத்துவய தாகும்பாரு. மொய்த்தெடுத்துச் செலவுசெய்து அன்னமீய்ந்து - மொய்குழலாள் பாதமதை மனதில் வைத்து, சத்தெடுத்துச் சடலமதை நிறுத்திக்கொள்ள - தான்தவசு செய்துகரை யேறுவாயே. (46)

ஏறுவது ஆறுதிங்கள் கிழங்கெடுத்து - என்மகனே உரலிலிட்டு யிடித்துநன்றாய், மாறுவது வெள்ளைக்கற் சுண்ணமொன்றும் - மக்களே முடிசுண்ணம் அன்னசத்து, சாறுவது பூமியுட பூனீர்சுண்ணம்-தன்மையுள்ள கேசரியி லுப்புச்சுண்ணம், மீறுவது வெடியுப்புச் சுண்ணம்போடு-மிதமாக யிருகாதே சாரமாமே. (47)

சாரமாங் கரியுப்புக் கல்லுப்பாகும்-சண்டாள யிந்துப்பு வளைகிலு
ப்பு, பாரமாஞ் சவுட்டுப்புச் சங்குசுண்ணம்-பத்தியுடன் வகைவகை
க்குப் பலந்தானாறு, நேரமாங் காந்தமொடு சிலையுங்கெந்தி - நேர்மை
யாங் கெவுரியொடு இங்கிபோடு, காரமாம வீரமொடு பூரஞ்சேரு-
கண்மணியே லிங்கரசம் பலமுமாமே. (48)

ரசமாகு மூன்கருவிற் சேர்த்துக்கொண்டு - நன்றாக யிடித்து
மொரு பாண்டத்திட்டு, வசமாகச் சட்டிகொண்டு மூடிநன்றாய்-மண்
சீலை வலுவாகச் செய்துகொண்டு, பசமாகக் குழிவெட்டிப் புதைத்து
ப்போடு - பார்மகனே திண்ணையது பதிவாய்ப்போடு, குசமாகச்
சிவபூசை சத்திபூசை - குணமாகச் செய்துகொண்டு மண்டலந்தான்
காரே. (49)

மண்டலந்தான் சென்றபின்பு குழியைவெட்டி-மக்களே பாண்ட
மதை வெளியில்வாங்கி, குண்டலந்தா னதிற்பூத்த பூவைவாங்கிக்-
குருபூசை சிவபூசை சத்திபூசை, விண்டதொரு அரதேசிப் பரதேசி
க்குய-வேணபடி அன்னமது மிகவுஞ்செய்து, கண்டதொரு காட்சி
யெல்லாந் தீட்சையாகும் - கனிவாக முடிந்துதென்றால் காயசித்தி
யாமே. (50)

சித்தியடா கசடையெலலாம் வாரிக்கொண்டு-திடமான கல்வமதி
லரைக்கும்போது, முத்தியடா சிறுபசளைச் சாறுவிட்டு-மூர்க்கமுட
னரைத்துநன்றாய் வில்லைதட்டி, பத்தியடா ஓட்டினில்வைத் தோடு
மூடிப்-பயபக்தி யாய்ப்புடத்தில் வைத்தெடுத்து, சத்தியடா குட
த்துநீர் விட்டுஆட்டித்-தன்மையென்ற வில்லைதட்டிக் காயப்போடே.

காயவைத்து ஓடுதனில் வைத்துமூடிக்-கனமாக மண்சீலை யேழுஞ்
செய்து, நேயம்வைத்துப் புடமதனில் வைத்தெடுத்து-நுண்மையுடன்
சவுக்காரச் சுண்ணமாச்சு, பாயவைத்துச் சுண்ணமதிற் சாரம்சேர்
த்துப்-பனியில்வைக்கச் செயநீராம் பாருபாரு, மாயவைத்த செய
நீரில் சரக்குத்தோய்த்து-மைந்தனே அக்கினியில் வாட்டுவாயே. (52)

வாட்டுவாய் சரக்கெல்லாங் சுட்டுப்பாரு - வாகான சுண்ணமாஞ்
செந்தூரமாகும், காட்டுவாய் மெழுகாகும் வெள்ளிசெம்பில் - கண்
மணியே சுண்ணமது பத்துக்கொன்று, நாட்டுவாய் வயதங்கே பத்து
மாகும்-நல்லபிர யோகமடா சுண்ணப்போக்கு, கூட்டுவாய் செந்தூர
மைம்பதுக்கொன்று கொடுத்திடவே வயதுபதி னாறுமாச்சே. (53)

ஆச்சப்பா மெழுகெடுத்து வெள்ளிசெம்பில்-அப்பனே நூற்றுக்கு ஒன்றுபோடு, நீச்சப்பா நிலையாக வயதைச்சொல்ல-நினைவு முண்டோ மதியுமுண்டோ வாயுமுண்டோ, பாய்ச்சப்பா சித்தர்செய்யும் பதியுமாகும்-பண்புள்ள புலத்தியனே சொல்லக்கேளு, சாய்ச்சப்பா ஆறினுட தீட்சையானால்-கண்கொள்ளா வேதையிது கண்டுபாரே. ()

கண்டுபார் எழுதிங்கள் கிழங்கெடுத்துக்-கண்மணியே கல்லுரவி விட்டுக்கொண்டு, பண்டுபார் கும்பிடுகற் சுண்ணமொன்று-பார்மகனே அன்னசத்து உப்பதொன்று, விண்டுபார் பூமியுட பூனீரொன்று-விள்ளாதே அமுரியுப்பு முடியுப்பொன்று, சொண்டுபார் வகையொன்று பலமுமேழு-கூடவே போட்டுநன்று யிடிப்பாய்பாரே. (55)

பாரப்பா உப்புவகை சொல்லக்கேளு-பண்ணியதோர் வெடியுப்புச் சாரவுப்பு, காரப்பா கரியுப்புக் கல்லுப்பாகும்-கனமான யிந்துப்பு வளகிலுப்பு, நேரப்பா வகைக்கொரு பலமுமேழு-நினைவுகெட்ட தோசிகளே பொரிகாரஞ்சீனம், சேரப்பா முன்னிடையே சேர்த்துக்கொண்டு-திரளான கெந்தியொடு தாரஞ்சேரே. (56)

தாரமடா லிங்கமுடன் வீரஞ்சேரு-தன்மையுள்ள புலத்தியனே சிலையுஞ்சேரு, பாரமடா பூரமது செந்தூரம்போடு-பலநினைவு வையாதே சிங்கிசேரு, காரமடா 'துருசுதொட்டி பாசாணஞ்சேர்-கனத்ததொரு கருவங்கச் சுண்ணஞ்சேரு, வீரமடா குறையாமல் பலமுமேழு-விளங்கவே சேர்த்துநன்று யிடித்திடாயே. (57)

இடித்துமொரு பாண்டத்தி விட்டுமூடி-யென்மகனே மண்சீலையேழுஞ்செய்து, பிடித்ததொரு நிலையாக நிலையில்நின்று-பேசாதே குளிவெட்டிப் புதைத்துப்போடு, மடித்ததொரு மண்டலமே சென்றபின்பு-மக்களே குருபூசை சிவபூசைசெய்து, தடித்ததொரு குழிவெட்டி யெடுத்துப்பாரு-தன்மையுள்ள உப்புவெகு புதுமையாமே. (58)

புதுமைவெகு புதுமையடா புதுமையாகும்-போற்றுவாய் வார உப்பைப் பதனம்பண்ணு, பதுமையென்ற கசடையெல்லா மெடுத்துக்கொண்டு-பார்மகனே கல்வமதி லரைத்துநன்றாய், கதுமையென்ற பசனீர் விட்டுஆட்டிக்-கண்மணியே உலரவைத்துப் புடத்தைப்போடு, ததுமையென்ற புடமாறி யெடுத்துப்பாரு-தன்மையுள்ள சுண்ணமதா யிருக்கும்பாரே. (59)

பாரேநீ சுண்ணமதைக் கல்வத்திட்டுப் - பாய்ச்சடா பழச்சாறு விட்டுஆட்டி, காரேநீ வில்லைகட்டிக் காயப்போடு-கனமான ரவிதனிலே காய்ந்துதானால்; சேரேநீ ஓட்டில்வைத்து ஓடுமூடிச் - செம்மையுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரு, மாரேநீ மல்லிகைப்பூப் போலேமக்காள்-மலர்ந்திருக்கும் பூவதனை வாரிக்கொள்ளே. (60)

கொள்ளடா பூவுடனே சாரம்சேர்த்துக் - குணமான மதிதனிலே பனியில்வைக்க, விள்ளடா சலமதுவும் வாருதிபோலாகும் - வேதாந்தக் கருவினுட விபரத்தாலே, சொல்லடா சரக்கெல்லாந் துவைத்து வாட்டச்-சுண்ணமுமாஞ் செந்தூர மெழுகுமாகும், கல்லடா கரைந்துருகும் வேதைமார்க்கம்-கண்கொள்ளா வேதையிது கண்டுபாரே.

கண்டுபார் சுண்ணமென்றால் பத்துக்கொன்று-கண்மணியே செந்தூரம் ஐம்பதுக்கொன்று, விண்டுபார் மெழுகென்றால் நூற்றுக்கொன்று-மேன்மையுள்ள மாத்தாகும் விரும்பிப்பாரு, தொண்டுபண்ணுஞ் சீஷருக்குச் சொல்லவேண்டாம் - சொல்லுவது மனமறிந்து சொல்லவேணும், பண்டுமே பெரியோர்கள் மோசம்போன-பழங்கதைபோலாகுமப்பா பாருபாரே. (62)

பாரப்பா எட்டுதிக்கள் கிழங்கெடுத்துப் - பதிவாக சமர்த்துடனே கொண்டுவந்து, ஆரடா கல்லுரலி லிட்டுக்கொண்டு-அப்பனே கடப்பாரை கொண்டுகுத்து, வாரடா கேசரிநீர் படிதான்ரெண்டு-மைந்தனே ஒட்டகநீர் படிதான்ரெண்டு, மாரடா யானைநீர் படிதான்ரெண்டு-வளமான குதிரைநீர் படிதான்ரெண்டே. (63)

ரெண்டான பசலைநீர் படிதான்ரெண்டு - நேரான கும்பிடுகற் சுண்ணமொன்று, குண்டான அன்னசத்து உப்புவொன்று - குணமான அமுரியுப்பு முடியின் சுண்ணம், பண்டான பூநீரு வகையொன்றுக்குப் - பதிவாகப் பலமெட்டு நிறுத்துக்கொண்டு, கண்டாயோ வெடியுப்புச் சாரவுப்புக்-கண்மணியே சீனமுடன் காரமாமே. (64)

காரமடா சூடனது வகையொன்றுக்குக்-கனிவாக நிறையெட்டு யெடுத்துக்கொண்டு, தாரமடா கெந்தியுடன் காந்தம்சேரு-துடியான கெவுரியொடு சிலையுஞ்சேரு, பாரமடா தொட்டியுடன் பாசானந்தான் - பார்மகனே லிங்கமொடு பூரஞ்சேரு, நேரமடா வீரமுடன் செந்தூரஞ்சேரு-நினைவாக ரசமுடனே வங்கஞ்சேரே. (65)

சேருஒரு நிரையாகப் பலமெட்டு - சோப்பா கல்லுரலில் மய
னம்போலே, பாருஒரு பாண்டத்தி விட்டுமூடிப்-பதிவான மண்சீலை
வலுவாய்ச்செய்து, காருமொரு குழிவெட்டிப் புதைந்துப்போடு-
கண்மணியே சமாதிதனிற் பூசைபண்ணு, சேருமொரு மண்டலந்
தான் சென்றபின்பு-திரும்பயெடு கவசமதைத் திறந்துபாரே. (66)

திறந்துபார் பூவிருக்கும் வாரிக்கொண்டு-திசையுப்பு வெகுபதன
மிதற்குநாமம், உரைந்துபோம் கசடெல்லா மெடுத்துக்கொண்டு-உத்த
மனே கல்வமதி விட்டுஆட்டு, நிரைந்துபோம் பசளைநீர் குடத்து
நீரும் - நினைவாக அறுவகையி னீராலாட்டி, கரைந்துபோம் வில்லை
தட்டிக் காயவைத்துக்-கனமான புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே.

கொள்ளடா கொடியதொரு சுண்ணமாச்சுக்-கொடுமுடியும் வெ
ந்துவிடும் சுண்ணப்போக்கு, கல்லடா நிமிஷமதிற் கரைந்துபோகும்-
கண்கொள்ளா வேதையிது கண்டுபாரு, சொல்லடா சாரமங்கே சேர்
த்துக்கொண்டு - துடியான மதிதனிலே பனியில்வைக்க, செல்லடா
சலமதுதான் வாருதிபோற்காணும்-செலமதனைப் பதனமதாய் வைத்
துப்போற்றே. (68)

போற்றுவாய் சரக்கெல்லாஞ் சுருக்குப்போடு - போதரவாய்க்
கட்டிவிடும் புதுமைமெத்த, ஆற்றுவா யன்னீரை விட்டரைத்து-
அப்பனே வில்லைதட்டிக் களையப்போடு, மாற்றுவா யோட்டில்வை
த்து ஓடுமூடி-மக்களே மண்சீலை வலுவாய்ச்செய்து, தாற்றுவாய் கஜ
புடமே வைத்தாலுந்தான்-தாயினுட கிருபையினாற் சுன்னமாச்சே. ()

சுன்னமொன்று செய்துகொண்டு விட்டிடாதே - சோதியென்ற
செந்தூரஞ் செய்துபாரு, கன்னமென்று கட்டியதோர் சரக்கைவாங்
கிக்-கருவான நீர்துவைத்து விளக்கில்வாட்ட, அனனமென்ற கிளி
மொழியாள் கிருபையாலே - அப்பனே செந்தூரங் கண்கொள்ளாது-
சொன்னமென்ற துரைகளெல்லா மிதுபோலொன்றும், தோணாது
செந்தூரந் துடியாம்பாரே. (70)

துடியான செந்தூரஞ் செய்யும்போது - துவண்டலைந்து போகா
தே பூனீர்கொஞ்சம், மடியான யின்னீரிற் குழைத்துக்கொண்டு-
மாட்டுவாய் கட்டிக்குக் கவசம்பண்ணி, கொடியான சோதிதனில்
வாட்டும்போது - குழந்தைப்பெண் கிருபையினாற் செந்தூரிக்கும்,
வடிவான மெழுகுசெய்யு மார்க்கஞ்சொல்வேன் - வஸ்துவென்ற பிரம
உப்பில் கொஞ்சமசேரே. (71)

சேர்த்துமே யின்னீரிற் குழைத்துக்கொண்டு-செயமான கட்டிக் குக் கவசஞ்செய்து, பார்த்துமே சுடரொளியில் வாட்டும்போது-பக் மிணிப்பெண் கிருபையினால் மெழுகுமாகும், எத்துமே அஞ்சுமுதல் பத்துமட்டும்-எடுத்திட்ட நீரதனில் கருவைத்தொட்டு, சாத்துமே வகைகண்டு வெள்ளிசெம்பில்-தான்கொடுத்தால் வயதுசொல்ல முடி யாதென்னே. (72)

முடியுமொன் பதுதிங்கள் கிழங்கெடுத்து-முக்யமடா நவக்கிரகஞ் சேர்ந்தபிண்டம், படியாது சித்துவெகு மகிமையுண்டு - பார்மகனே சித்தர்மெச்சுங் கருவதாகும், கொடியதொரு நவக்கிரக பூசைசெய் வாய்-குருவென்று கண்மூடி யிருந்துமாய்வான், கடியாது யிக்கரு வைப் பூசைவிட்டால்-காணுமற் சடலமது அழியும்பாரே. (73)

அழியாமற் சொல்லிவைத்தேன் கருவையெல்லாம் - அப்பனே அறிந்துகொண்டு பூசைபண்ணு, நெளியாமல் நின்றவனே சித்தன் சித்தன்-நேரறிந்து பார்த்தவனே யோகியாகும், பணியாமல் உலக மென்ற வாழ்க்கைவிட்டு - பதவிகண்டு தேர்வதற்குக் கருவுஞ்சொன் னேன், சுளியாமற் சுழன்றலைந்து யிருந்திடாதே-சொன்னேனே கரு வையெல்லாம் வெளியாய்த்தானே. (74)

வெளியான கருவெடுத்து உரலிற்போட்டு-மெய்மறந்து சோரா தே மயனம்போலே, குளியான கோவாலை நன்றாய்க்குத்தி - கொடு த்துவிடு முன்சொன்ன நீரதஞ்சும், பளியான வகைக்குக்கால் படி யதிகஞ்சேர்த்துப்-பார்மகனே கருச்சரக்கு அஞ்சுஞ்சேர்த்து, வளி யான வகைக்குஒரு பலமுங்கூட்டி - மைந்தனே போட்டுநன்றா யிடித் திடாயே. (75)

இடித்திடுவாய் உப்புவகை அஞ்சும்போட்டு - என்மகனே வகை க்கிஒரு பலமுங்கூட, துடித்திடுவாய் காரமுள்ள சரக்கெல்லாந்தான்-தோணுமடா பதினொன்றுந் துடியாய்ச்சேரு, மடித்திடுவாய் ஒன்பது மே பலமுங்கூட்டி-மக்களே கல்லுரலில் மயனம்போலே, சடித்திடு வாய் பாண்டமதில் விட்டுமூடி-சதிராக மண்சீலை வலுவாய்ச்செய்யே.

செய்துமே சமாதிதனில் வைத்துப்போற்று - தீவினைகளகற்று கின்ற கருவைத்தானும், நய்துமே மண்டலங்கள் பூசைசெய்து - நன் றாகத் தீபமுடன் தூபங்காட்டி, கொய்துமே சிவபூசை சத்திபூசை-குருபூசை செய்துபர தேசிக்கன்னம், செய்துமே களபமுடன் தாம் பூலமீய்ந்து-சிறப்பாகப் பூசைகளை முடித்துப்பாரே. (77)

பூசைமுடி வானபின்பு சமாதருகிற் சென்று-புண்ணியனே குழி திறந்து தேவிபதம் போற்றி, பாஷைமுடி வானகரு கவசம்நீக்கிப் - பார்க்கவென்றாற் கண்கூசும் பளிங்குபோலாம், நேசம்வைத்துக் குருபதமே கெதியென்றெண்ணு - நினைவுதடு மாறாமல் சுளினைக்கேத்தி, ஆசையது மிகவும்வைத்து மனதுகூர்ந்து - அள்ளிவிடு நீரையெல்லாம் பதனம்பண்ணே. (78)

பதனம்வெகு பதனமதாய்ப் பண்ணிக்கொண்டு-பாலகனே தேவி முன்புவைத்துப் போற்று, விதனமது ஒன்றுமில்லை வினையுமில்லை-மேலான யேமமென்ற பயமுமில்லை, சதனமதில் கிரோதகையின் பயமுமில்லை-சண்டாள மாய்கையெல்லாந் தவிழ்ந்துபோச்சு, உதனமதில் ஞானமென்ற வாழ்க்கைசேர்ந்து-உத்கமனே சடலமழி யாது பாரே. (79)

அழியாது ஞானநிலை வலுத்துப்போச்சு-அப்பனே கசடையெல்லா மெடுத்துக்கொண்டு, சுழியாது முன்செய்த படியேசெய்து-சுத்தமுள்ள கைபாகந் தப்பிடாதே, நெழியாது மனமதுவும் பேதியாது-நேர்மையுள்ள கருவப்பா நவக்கிரகமான, குழியாத கருவையங்கே அறியமாட்டார்-கோடான கோடிசெந்து யிறந்திட்டாரே. (80)

இறந்திட்டார் கருவையறி யாமற்றானே-என்மகனே நான்வெளி யாய்ச் சொல்லிவைத்தேன், பறந்திட்டார் கைபாக செய்பாகங்கள்-பார்மகனே நிரைபாகங் கணக்கின்பாகம், துறந்திட்டே னெளியவர் மேலிரக்கங்கொண்டு-சொல்வார்கள் சொல்வார்கள் சித்தரெல்லாம், மறந்திட்டால் ஞானமென்ற நிலையறியமாட்டாய்-மக்களே சோதியொளி காண்பதுதானரிதே. (81)

அரிதாகுஞ் சடலமது நிலையாதய்யா-அப்பனே வாதத்தில் ஒளி வைக்காணுப், தெரியாது சித்தரெல்லாந் தெளிவாய்ச்சொல்லார்-தெளிவாகு மிந்தநூல் தெளிந்துபாரு, குரியாது யிதுபோலே ஒரு நூலில்லை - கொடுத்திடா நந்திமுன்னூற் திறவுகோலாம், பரியாது நந்திசொன்ன வித்துவப்பா - படுமுன்னே யிக்கருவுங் குருவுமாமே. (82)

குருவாகும் யெவ்வகையில் தொழிலுக்கெல்லாம் - கூட்டுவாய் நூத்துக்கு ஒன்றுபோடு, அருவாகு மக்கருவுஞ் சேர்ந்தபோதே-அப்பனே சித்திமுத்தி தீக்ஷைமுத்தி, மருவாகு முருவாகும்வழி துறையுமாகும்-மக்களே மயிர்விலக மலைவிலகும்பாரு, சருகுவதா யிக் கருவை விட்டாயானால்-தாழ்வுவரும் பலிதமில்லை சாஸ்திரம் பொய்யே. (83)

பொய்யாது கருவையங்கே விட்டிடாதே - போதரவாய்க் கை பாகம் மறந்திடாதே, செய்யாதே செய்பாகம் நிரையின்பாகம்-செப் பாது கணக்கினுட பாகந்தானும், தொய்யாது மற்றசாஸ் திரங்க ளெல்லாம் - சொல்லாது யிதுபோற்றே ணுதுபாரு, கையாரக் கண்டதிந்தத் தொழில்களெல்லாம்-காட்டாதே உலகுதனில் காட் டொண்ணுதே. (84)

ஒண்ணுது பத்துதிங்கள் கிழங்குதன்னை-உத்தமனே கொண்டு வந்து உரலிற்போட்டு, எண்ணுதே முன்சொன்ன படியேசேர் த்து-எடுத்திடுவாய் நீர்படிகா லதிகமாகக், குண்ணுதே சேர்சரக்குப் பலமொன்றப்பா-கூடவே போட்டுநன்று யிடித்துக்கொண்டு, கண் ணுதே பாண்டமதி லிட்டுமூடிக்-கனமான மண்சீலை வலுவாய்ச்செய் யே. (85)

செய்துகொண்டு சமாதிதனில் வைத்துப்போற்று - திடமாக மண்டலங்கள் சென்றபின்பு, கொய்துகொண்டு நேமநிஷ்டை மற வாதேநீ - குழந்தையவள் பூசையையும் - மறவாதேநீ, நொய்து கொண்ட சிவபூசை சத்திபூசை-நினைவாக மனதோர்மை யாகநின்று, பைய்துகொண்ட பரதேசிக் கன்னம்போடு-மனமகிழ்ச்சி யொடுபூசை முடிப்பாயப்பா. (86)

முடிப்பாயே சங்கோசை சேகண்டிநாதம்-முழக்கடா பேரிகை யு மேளவாத்தியம், அடிப்பாயே தித்தியுடன் மத்தாளஓசை - ஆடு கின்ற சங்கீத வாத்தியமெல்லாம், அடிப்பாயே மண்டலங்கள் செ ன்றபின்பு-அடிபணிந்து சமாதருகிற் சென்றுநீயும், ஓடிப்பாயே தூபமுடன் தீபங்காட்டி - ஒழுங்குகுழி திறந்துகரு வெடுப்பாய் நீயே. (87)

எடுத்ததொரு கருவையங்கே வாலைமுன்பு - இட்டுவைத்துப் பூசைநிறை வேறுங்காலம், கொடுத்திடுவாய் வாரமொன்று பூசை செய்து-கோதையென்ற மனோன்மணிக்கு உபசாரஞ்செய்து, அடுத் திடுவாய் கவசமதை அவுழ்த்துப்பாரு-அப்பனே உப்புநிரஞ் சொ ல்லொண்ணுது, படுத்திடுவாய் உப்புவெகு பதனம்பண்ணு - பரம குரு பாதமதைப் பணிந்துபோற்றே. (88)

போற்றுவாய் கசடெல்லா மெடுத்துக்கொண்டு-போதரவாய்க் கல்வமதி லிட்டுக்கொண்டு, ஏற்றுவாய் சிறுபசளைச் சாறுவிட்டு - என்மகனே துவளஅரைத் தெடுத்துக்கொண்டு, ஆற்றுவாய் வில்லைதட்டிக் காயப்போடு - அப்பனே வில்லையங்கே காய்ந்துதா னுல், சாற்றுவா யோட்டினில்வைத் தோடுமூடிச் - சந்துவாய் தெரி யாமற் சீலைசெய்யே. (89)

சிலையது மண்சிலை யெழுஞ்செய்து-செம்மையுடன் புடத்தில் வைத்து யெடுத்துப்பாரு, வாலைவய துடையபெண்ணாள் கிருபையாலே-வணங்கிநின்ற சுண்ணமதைக் கண்டபோதே, சோலையது போல்வளருஞ் சுண்ணப்போக்கு - சோதிமயச் செந்தூரஞ் செய்துபாரு, காளைதனி லேருமவன் கடாக்ஷத்தாலே-கண்டபடி சொல்லுகிறேன். கருத்தாய்ப்பாரே. (90)

கருவென்ன பூனீரிற் பத்துக்கொன்று - கட்டாக யிடித்துநன்றா யின்னீர்விட்டு, குருவென்ற பழச்சாறு கொஞ்சமிட்டு - குணக்கரவே யரைத்து நன்றாய் வில்லைதட்டி, பருவென்ற ஓட்டில்வைத்து ஓடுமூடிப்-பண்பாகச் சிலைமண் வலுவாய்ச்செய்து, சருவென்ற முழப்புடத்தில் வைத்தெடுத்துத் - தாயான மனோன்மணிக்குப் பூசைபண்ணே. (91)

பூசைபண்ணி யெடுத்துப்பார் செந்தூரத்தைப்-போற்றுவாய் கண்கொள்ளாச் சிவப்பேயாகும், பாஷைபண்ணி ரசமதனிற் பத்துக்கொன்று - பாய்ச்சடா செந்தூரம் பதமதாக, நேசைபண்ணி யின்னீரை விட்டுஆட்டி - நினைவாக வில்லைதட்டிக் காயப்போட்டு, மூசைபண்ணி யோட்டினில்வைத் தோடுமூடி - முக்கியமாய் சிலைமண் வலுவாய்ச்செய்யே. (92)

செய்துமே முழப்புடத்தில் வைத்தெடுத்துத்-திரணமது போகாமற் பதனம்பண்ணு, நொய்துமே யெச்சரக்கு மிதுபோற்செய்தால் - நோக்குமுன்னே செந்தூரங் கண்கொள்ளாது, பய்துமே மெழுகுசெய்யும் வகையைக்கேளு-பார்மகனே செந்தூரம் நூத்துக்கொன்று, வய்துமே பிர்மமென்ற உப்புப்போட்டு-மாட்டுவாய் பூனீரிற் சலத்தைவிட்டே. (93)

விட்டுமே யாட்டிநன்றா யுருட்டிக்கொண்டு-வேதமொழி தவறாமல் விளக்கில்வாட்ட, கட்டுமே மெழுகாகும் மெழுகின்வேதை-கண்கொள்ளாக் காணுமடா சரக்கிற்றாக்கு, பட்டுமே சரக்கெல்லா மெழுகாய்ப்போகும் - பார்மகனே மெழுகினுட பெருமைமெத்த, தட்டுண்டு போகாதே தவநிலையிற் - றானிருந்து சடலமதை நீகாப்பாயே. (94)

தான்காப்பா யுன்னுயிர்போற் கருவைக்காரு - சண்டாளர்க்கிக்கருவைச் சொன்னாயானால், மான்காத்த சிவனுமங்கே சாபமீவார்-மனதடக்க மாயிருந்து தொழிலைப்பாரு, வான்காத்த வாலைப்பெண் யெனக்குச்சொன்னாள் - வளமையெல்லாம் வெளிதோணச் சொல்லிவைத்தேன், பொன்காத்த பூதமது போலேகாத்துப்-போற்றுவாய் குருச்சொன்னால் தலைவெடிக்குந்தானே. (95)

தானென்ற உலகமதி லிக்கருவையெல்லாம் - தன்மையுடன் கோடியிலே ஒருவன்செய்வான், தேனென்ற சித்தர்கள்தான் முறைதப்பாமற்-செய்திடுவா ரவர்க்குவருந் தீட்சைபத்தும், வானென்ற பெரியோர்கள் வன்மையெல்லாம் - மக்களே கண்டுமனந் தேறவேணும், கோனென்ற சிவனெனக்குச் சொன்னதீட்சை-கோதையென்ற வாலைப்பெண் குடியுமாமே. (96)

குடியாகத் தானிருந்து தீட்சைபத்தும் - குணமாகச் செய்து கொண்டு கற்பங்கொள்ளு, வடிவாக யிடைபஞ்சி கரணதீட்சை-வளமாகச் சொல்லிவைத்தேன் வரிசையாகப், படியாக மூன்றினுட காண்டந்தன்னிற்-பகர்ந்திட்டேன் கருவையெல்லா மறைப்பில்லாமல் கொடியாக நாலினிலே யோகமார்க்கம்-கூறுகிறேன் வகையாகக் ;கூறுவேனே. (97)

கூறினே னிக்காண்டஞ் சித்தர்க்காகும்-குவலையத்தி லிக்காண்டம் வெளிவிட்டாக்கால், நீறிவிடும் அவன்சிரசு வெடித்துப்போகும்-நேர்மையுள்ள உமையாளின் சாபத்தாலே, பாறிவிடு மவன் குலங்க ளற்றுப்போகும்-பஞ்சமா பாவமதுக் காளாகாதே, மீறிவிடும் நாலினுட காண்டந்தன்னில்-மெய்நிறைந்த யோகமதை விளம்புவேனே. (98)

விளம்புவேன் யோகத்தின் மார்க்கமெல்லாம்-விள்ளாதே புவிதனிலே விள்ளொண்ணாது, தளம்புறே னென்றாலுந் தளம்பொட்டாது - தவறிடுமோ கருவையங்கே கண்டபேர்க்கு, குளம்புமோ மனமோர்மை யாகநின்று - குறித்திடமே கெதியென்று குறித்தாயானால், சளம்புமோ ஞானநிலை கண்டபோதே-தவறாது ஞானமது மனமுமாமே. (99)

மனமங்கே ஓர்மைகொண்டு நிற்கவேணும் - மாயையெல்லாம் வீணென்று தள்ளவேணும், சனமங்கே பெண்டுபிள்ளை ஆசை தள்ளித்-தனியொருவ னாகநின்று குறியைப்பற்றி, இனமங்கேயிருந்ததினால் வாழ்க்கையுண்டோ-இறந்துவிடுஞ் சடலமது நிலையாகாது, குணமங்கே மவுனமென்ற யோகந்தன்னிற் - குறித்தவிடம் நிற்பதுவுங் குருவுமாமே. (100)

குருவாகு மூன்றினிலே கருவையெல்லாம் - கொட்டிவைத்தே னதினாலே யிந்தக்காண்டம், மருவாகும் நாலினிலே யோகமார்க்கம் - மனோன்மணியாள் கிருபையினால் வரிசையாகத், தெரிவாகும் ஞானத்தின் பொருளையெல்லாம்-செப்பினேன் மூன்றினிலே தெளிந்துபாரு, அரிவாகும் பரமகுரு நீயேயாவாய்-அடக்கிவைத்தேன் மூன்றினுட காண்டமுற்றே. (101)

அகஸ்தியர் மூன்றுங்காண்டம் ௱.

முற்றிற்று.

உ

பரமபதிதுணே.

அகஸ்திய மகாமுனிவர்
திருவாய்லர்ந்தருளிய
பரிபாஷை நாலாங்காண்டம் ௱.

விருத்தம்.

சுந்தர வடிவுள் ளானைத் தொழுதுகொண் டெந்தன் னெஞ்சில்
அந்தர மான சோதி அருமறை வேதம் நாலும்
சொந்தமென் றுண்டு கொண்ட தோகையைப் பாகம் வைத்த
சந்தனுக் குபதே சங்கள் இயம்பிணு ரீசன் றனே. (1)

ஈசனுர் சொன்ன வார்த்தை இருதயந் தன்னிற் கொண்டு
நேசமாய்ப் புகழ்ந்து போற்றி நெரிமுறை தவறு மற்றுன்
பாசமாய்ப் பாஷை நீக்கிப் பாடுறேன் நாலாங் காண்டம்
மோசமாய்ப் போய்விடாமல் மொழிந்தநூல் பயனைக் காணே. (2)

பயனது தெரிய வேண்டிப் பாஷையை நீக்கி நன்றுய்ச்
சயனது மெச்சுஞ் சித்தர் தவமுனி ரிஷிகள் நல்லோர்
மயனது மறைத்து வைத்த மறைபொருட் கருவை யெல்லாம்
துயனது வெளியதாகச் சொல்லுவே னறிவுள் ளோர்க்கே. (3)

அறிவுள்ளோ ரறிய வேணும் அறிவுகெட் டவர்க்கோ தோணும்
குறியது தெரிய வென்றுல் குருசொல்லிக் காண வேணும்
பரியது பாஷைசொல்லும் பண்புள்ளார் கண்டு கொள்வார்
சரியது சிவயோ கத்தைத் தானது உரைசெய் வோமே. (4)

உரைசெய்வோம் நாலாங் காண்டம் உண்மையை வெளிவிட் டோர்க்கு
பரைசொல்லிச் சாப மீவாள் பரனுமே கோபஞ் செய்வார்
கரைசெய்த பதினெண் பேருங் கண்டிப்பார் சாபந் தானும்
முறையது வெளிசொல் லாதே மூடரே நூல்கொ டாதே. (5)

நூலைவெகு பதனமதாய்ப் பதனம்பண்ணு - நோக்காதே யிக் கருவை வெளிவிடாதே, வாலைவெகு சிறுபிள்ளை மனதுநொந்தால்- மனம்நினைத்த படியங்கே முடியாதப்பா, காலையிலே யோகமது செய்துதேரு - கருவையெல்லாம் நான்வெளியாய்ச் சொல்லிவைத் தேன், கோலெடுத்துக் கொண்டலைந்த பேய்களுக்குக் - கொடுக் காதே சாஸ்திரத்தைக் கொடுக்கொண்ணுதே. (6)

யோகவிதி.

ஒண்ணுதே சிவயோக வாழ்க்கையெல்லாம்-உத்தமனே கருக் குருவும் நன்ருய்ச்சொல்வேன், எண்ணுதே பலநினைவை நினைந்தி டாதே-ஏழைமதி போகாதே யிறந்திடாதே, பெண்ணுசை பெண்டு பிள்ளை மாயைதள்ளிப்-பிடித்தபிடிக் குரங்கதுபோல் நின்ருயாஞல் சன்ஞசி நீயாவாய் சித்தஞவாய்-தன்மையுள்ள சிவயோக மிதுதா னென்னே. (7)

சிந்துரவைசாதகவழலை.

தேனென்ற ஒரிதழ்த்தா மரையைத்தானும்-செடிபூடு யில்லா மற் சுத்திசெய்து, கானென்ற கரிசாலை யாலேசுத்திக் - கசடறவே தேய்த்துநன்ருய் நெட்டிவாங்கி, பானென்ற கருசாலைச் சாறுநெ ய்யும்-பகர்ந்தொன்ருய்க் கலந்துகொண்டு குகையாம்வாசல், நானெ ன்ற வளுவளுப்பு அரவேசுத்தி-நன்ருகத் தேய்த்துவந்து நழுவத் தள்ளே. (8)

தள்ளயிலே கன்னக்கோல் கடவுதன்னில்-தள்ளிவிட்ட கள்ள னவன் தமர்வாசற்குள், துள்ளியவன் போகாமல் வுள்ளேசெல்ல - துணிந்துமனம் யிருவிரலாற் றுடியாய்த்தள்ளு, கள்ளனவன் கட வுகண்டு உள்ளேபோகக்-கதலிப்பான் நீமிதமா யிருந்திடாதே, உள் ளபடி அண்டமங்கே கொண்டுவந்து-உடன்சேரு வெடியுப்புப் பா திதானே. (9)

அண்டசீசுண்ணம்.

பாதியடா வெடியுப்பு அதிலும்பாதி-பாய்ச்சடா சாரமது அதி லும்பாதி, கோதியடா சீனமது சேர்த்துஒன்ருய்க் - கூட்டிநன்ருய்க் கருசாலைச் சாறுவார்த்து, ஆதியடா அரைத்துநன்ருய் வில்லை தட்டி-அப்பனே ரவிதனிலே காயப்போடு, சேதியடா ஒட்டில் வைத்து ஓடுமூடிச்-செம்மையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்யே. ()

செய்துமே முழப்புடத்தில் வைத்தெடுத்துத்-திரமாயிப் படி யைந்து முறைபேசெய்வாய், நொய்துகொண்ட சிறுபசளைச் சாறு விட்டு - நோக்கடா அஞ்சுமுறை முன்போற்செய்தால், மைது கொண்ட அண்டநீர் தனையெடுத்து - மாட்டுவா யிதனைநன்ருய்ச் சுத்திசெய்து; தைதுகொண்ட தற்சனைமத் திமையினலே - சவ் வை படச் செய்துநன்ருய் நெட்டிவாங்கே. (11)

வாங்கியே நாட்பழக்கஞ் செய்துவந்தால்-வணங்குவான் கள்ளனவன் யிரைதான்சென்றால், காங்கியே திரைமறைவு யேழுமுண்டு - கடவுதனைக் காணுதற்குப் பழக்கம்பண்ணு, தாங்கியே திரைமறைவு துறந்துதானால்-தள்ளிவிடு கள்ளனவ னுள்ளே போவான், நீங்கிவிடுந் திரைகளெல்லாம் விலகும்போது-நினைவுகொண்டு பொருளிருக்கு மிடம்பார்ப்பாயே. (12)

இடம்பார்ப்பான் பொருளிருக்கு மிடத்தைப்பார்க்க - இன்னமொரு துணைவேணு மிணக்கிக்கொள்ளு,. தடம்பார்த்த கள்ளனவன் மனக்குரங்குதானும்-தாண்டவிட்டால் பொருளிருக்கு மிடந் தோணாது, குடம்பார்த்த வீடுதனிற் பொருளைவைத்து-குருடனவன் போயெடுத்த குணம்போற்காணும், மடம்பார்த்த வீடுதனில் தீபம்வைத்து-மணியொளியான் போயெடுத்த வன்மைதானே. (13)

வன்மைபென்ன சேர்க்கையுள்ளான் சேரவேணும்-மனமென்ற கூத்தனவன் சேர்ந்தானானால், நன்மையதா யிருபேருங் கூடிக் கொண்டு-நன்றாகத் தானிருந்து வாழ்வார்வீட்டில், கன்மையென்ற மனமல்லோ சிவனுமாகும் - கடந்தபுத்தி சத்தியென்ற நாமமாச்சு, உண்மையென்ற மனமல்லோ ரவியுமாச்சு-ஓகோகோ புத்தியல்லோ மதியுமாச்சே. (14)

ஆச்சப்பா யிருபேரு முறவுசெய்து - அப்பனே வீடுதனில் வாழும்போது, போச்சப்பா யேமபயம் விலகிப்போச்சு-பொல்லாத பாசவினை அற்றுப்போச்சு, காச்சப்பா பெண்டுபிள்ளை பாசம் போச்சு-கட்டான உலகத்தின் வாழ்க்கைபோச்சு, நீச்சப்பா நிலையாத வெள்ளந்தானும்-நிலைத்துமே அரையளவாய் நிலைக்கும்பாரே.

நிலைக்குமடா ரவியில்மதி சேரவேணும் - நீக்கிவிட்டாற் கள்ளனவன் திருடன்போவான், குலைக்குமடா சடலமது அழிந்து போகும்-குருசொல்லு முபதேசம் ரவியில்மதிசேரு; மலைக்குமடா மனமங்கே உயரத்தூக்கும்-மதியென்ற புத்தியங்கே கீழேவாங்கும், கலைக்குமடா யிருபேருஞ் சேர்ந்தகாலம்-கைகண்ட சிவயோக வாழ்க்கைதானே. (16)

வாழ்க்கையிலே சிவயோக வாழ்க்கைதேட-வளமைதனை யறியாமல் மாண்டோர்கோடி, கேள்க்கையிலே அவரவர்க ளறிந்தமட்டும்-கெதியில்லா மூடரிடங் கேள்விகேட்டு, தாழ்க்கையிலே மனம்நின்று மாய்வதல்லாற்-சமப்படுவ தொருநாளு மில்லையில்லை, எற்கையிலே ரவியில்மதி சேர்ந்தபேர்கள் - இறவாமற் கற்பமறிந் துண் ஞுவாரே. (17)

உண்ணுவது கற்பமறிந் துண்ணவேணும்-உண்டவர்க ளொரு போது மாள்வதில்லை, திண்ணுவது சிறுமீனைப் பெருமீனுண்டு-செய்வதுபோற் காணுமடா கற்பஞ்சொன்னேன், பண்ணுவது அணுவல்லோ நாதவிந்து - பதிவாகச் சேர்ந்தாலிவ் வளவுமாச்சு, மண்ணுவது அண்டபிண்டஞ் சேர்ந்ததெல்லாம்-மாட்டினாற் கோடி யுகம் வாழ்வார்பாரே. (18)

வாழுவார் சிவயோகத் தன்மையெல்லாம்-வரிசையாய்ச் சொல் லிவைத்தேன் வளமாய்க்கேளு, ஆழுவார் மதியங்கே வாங்கும் போது-அப்பனே வங்கென்று நிருத்திமெள்ள, மீளுவார் புருவ மதிற் சுளினைமீதில் - மெய்மறந்து போகாதே மனக்கண்தன்னை, மாளுவார் மனதையங்கே நிருத்தும்போது - மக்களே அங்கென்று நிருத்துவாயே. (19)

நிருத்துவாய் நிருத்தமட்டும் பழக்கம்பண்ணி - நீவிடுவாய் ரவி தனிலே சிங்கென்றேதான், கருத்துவைத்து வாசியங்கே சீராமற் றுன்-கனிவாக நூலிளைந்த கதையைப்போலே, மருத்துமொரு ஓரிதழை மேலேநோக்கி - மதியாத சுளிமுனையில் மனதைவைத்து, பருத்துமொரு நான்சொன்ன கற்பந்தன்னைப்-பழுதென்று நினையா மற் பதிவாய்க்கொள்ளே. (20)

கொள்ளயிலே மனம்புத்தி ரெண்டுமொன்றாய்க்-கூடியுர வாடி யல்லோ கொள்ளவேணும், கள்ளனையும் வீட்டுக்குள் வைத்துக் கொண்டு - கதவடைத்த கதைபோலே யிருந்தாலய்யா, சள்ளைய டா பாசமது முன்னேதள்ளும்-சண்டாள மாயையது பின்னேவா ங்கும், வெள்ளமதி லகப்பட்ட துரும்புபோலே - மெலிந்துமனம் புண்ணாகி வீணாய்ப்போமே. (21)

போகாமல் மனம்புத்தி ரெண்டுமொன்று-பொருந்தினால் சத்தி சிவ மிதுதானப்பா, ஆகாமற் போகாது ரவிமதியும் - அப்பனே புத்திமனங் கலந்துவிட்டால், ஏகாம லிவனுமொரு சித்தனுவான்-என்மகனே யிவன்சடல மிறந்திடாது, வாகான ரவியைநம்பி யிரு ந்தோருள்ளம்-மயங்காது சிவயோக வாழ்க்கைதானே. (22)

தாதென்ற ஒன்றுமுத லஞ்சாண்டுக்குள் - தங்கநிற மான தொரு பூடுபார்த்து, வானென்ற வித்துவிரை யெடுத்துக்கொண்டு-மக்களே அதிற்சேர்க்கும் வகையைக்கேளு, பானென்ற பேரண்ட முதன்மையாகப் - பார்த்தெடுத்துச் சுத்திசெய்து பகரக்கேளு, கோனென்ற அண்டத்தி னிடையேஉப்பு - கூட்டுவாய் சாரமது பாதிசேரே. (23)

பாதியிலே அதிற்பாதி சீனஞ்சேரு-பசளேயது சாறுவிட்டு நன்ருயாட்டு, வாதியென்ற பேப்மக்காள் வில்லேதட்டி-வளமான ரவிதனிலே காயப்போட்டு, சோதியென்ற ஒட்டில்வைத்து ஓடுமூடி-துப்பரவாய்ச் சீலேமண் வலுவாய்ச்செய்து, சாதியென்ற முழப்புடத்தில் வைத்தெடுத்துத்-தகமையிப் படியைந்து முறைதான்செய்யே. (24)

செய்துபுடந் தீர்ந்தவுடன் வெள்ளுரமுஞ்சூடன்-சேரடா சரியிடையா யெடுத்துக்கொண்டு, பய்தஅண்ட உப்புக்கு நாலிலொன்று-பாய்ச்சடா பசளேச்சாற் விட்டுஆட்டி, கொய்துகொண்ட அண்டமுட னுரவுசேரக்-கூட்டியரைத் தேயெடுத்து வில்லேதட்டி, நைதுகொண்டு ஒட்டினில்வைத் தோடுமூடி-நன்ருயிப் படியைந்து முறையேசெய்யே. (25)

முடிசுண்ணம்.

செய்துகொண்ட உப்பதனேப் பதனம்பண்ணு - செம்மையுடன் முடிசுண்ணஞ் செய்துபாரு, பய்துகொண்டு முடியெடுத்துச் சுத்திசெய்து-பாலகனே அதிற்பாதி சங்குச்சுண்ணம், சய்துகொண்ட அமுரிதனிற் கரைத்துக்கொண்டு-தணலென்ற ரவிமுகத்தில் வைத்துக்காய்ந்தால், கொய்துகொண்ட பாண்டமதி லிட்டுத்தீயை-கொளுத்தடா முடியெல்லாஞ் சாம்பலாமே. (26)

சாம்பலெல்லாம் வாரியொரு பாண்டத்திட்டுத்-தன்மையுடன் சிறுபசளேச் சாறுவிட்டு, காம்பலென்ற சாம்பலெல்லாங் கரைத்து நன்ருய்க்-கண்மணியே தெளிவதனேப் பாண்டம்வாங்கி, ஆம்பலென்ற அடுப்பில்வைத்து தீயைமூட்டி - அப்பனே வத்தினபின் ரவியில்வைத்து, சோம்பலாய்த் திரியாதே உப்பைவாரி-சொன்னபடி பூமியுட பூனீர்போடே. (27)

போடடா ரெண்டையுந்தான் சரிகொண்டேதான் - புண்ணியனே ரவிசலத்தை விட்டுஆட்டி, நாடடா வில்லேதட்டிக் காயப்போடு - நன்ருகக் காய்ந்தபின்பு ஒட்டில்வைத்து, மூடடா மண்சீலே வலுவாய்ச் செய்து-முழப்புடத்தில் வைத்தெடுத்துப் பார்க்கும்போது, கூடடா சுண்ணமது கடுமையாகும் - குணமாகத் தானெடுத்துச் சுத்திபண்ணே. (28)

சுத்திபண்ணி உப்பதனே யெடுத்துக்கொண்டு-சூட்டுவாய் வெடியுப்புச் சாரஞ்சீனம், பத்தியுடன் சரியிடையா யெடுத்துக்கொண்டு-பார்மகனே வெள்ளுரமுஞ் சூடன்தானும், முத்தியுட னிடைசரியா யெடுத்துக்கொண்டு-முன்சொன்ன உப்புடனே சேர்த்துக்கொண்டு, சத்தியுடன் முடியுப்புக் கூடச்சேர்த்துத்-தன்மையுடன் சிறுபசளேச் சாறுவாரே. (29)

சாற்வார்த்துத் தானரைத்துவில்லைதட்டித் - தணலென்ற ரவி முகத்திற் காயவைத்து, நேர்பார்த்து ஒட்டில்வைத்து ஓடுமூடி- நினைவாக மண்சீலை வலுவாய்ச்செய்து, தார்பார்த்து முழப்புடத்தில் வைத்தெடுத்துத்-தாயான மனோன்மணியைத் தொழுதுபோற்றி, கூர்பார்த்திப் படியஞ்சு முறையேசெய்தால் - கொடுஞ்சுண்ணம் வெகுபதனம் முறையைக்கேளே. (30)

அன்னசத்துஉப்பு.

முறையான அன்னசத்தைக் கொண்டுவந்து-முத்திபெற உரலிலிட்டுத் தூளதாக்கி, பரையான நாலுபடி தூளெடுத்துப்-பாய்ச்சடா பசளைச்சாற் படியெட்டப்பா, விரையான பூனீரு பலமும் நாலு-விட்டுமே கிண்டிநன்றாய்க் கலக்கிவைத்து, தரையான மூன்று நாள் சென்றபின்பு-தான்தெளிந்த நீரையெல்லாம் வேறேவாங்கே.

வாங்கியே யடுப்பில்வைத்துக் காய்ச்சும்போது-மக்களே குளம்பதுபோல் வருதல்கண்டு, ஏங்கியே சோறுதே பீங்கான்றன்னில்- எடுத்திடுவாய் ரவிதனிலே வைக்கும்போது, தூங்கியே திரியாதே படருமுப்புச்-சொல்லவொண்ணு உப்பெடுத்துப் பதனம்பண்ணு, தாங்கியே யிப்படியஞ்சு முறையேசெய்தால் - தன்மைஉப் பதிற் சேர்க்கும் வகையைக் கேளே. (32)

கேளடா வெடியுப்பு அதிற்பாதிசாரம்-கேள்மகனே சீனமொடு அதிலும்பாதி, வாளடா அன்னசத்து உப்பில்பாதி - வன்மையுடன் பசளைநீர் விட்டுஆட்டி, ஆளடா ஆட்டிநன்று யுருட்டிவில்லை- அப்பனே செய்துகொண்டு காயவைத்து, மூளடா ஒட்டில்வைத்து ஓடுமூடி-முக்கியமாய் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (33)

செய்யடா முழப்புடத்தில் வைத்தெடுத்துத் - திண்ணமாய்ப் படியைந்து முறையேசெய்தால், சய்யடா சங்கினுட சுண்ணம் பாதி-சரியிடையாய் சிவன்வேம்பு உப்புப்பாதி, கொய்யடா ரெண்டையுமே சேர்த்துநன்றாய்க்-குளிரவிட்டு பசளைநீர் விட்டுஆட்டி, நய்யடா அரைத்துநன்றாய் வில்லைதட்டி - நன்றாகக் காய்ந்துநன்றாயோட்டில்வையே. (34)

ஓட்டில்வைத்து ஓடதுகொண் டேதான்மூடி-உத்தமனே மண்சீலை வலுவாய்ச்செய்து, நாட்டில்வைத்திப் படியைந்து புடமேபோடு-நன்றாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரு, மூட்டிவைத்த மூன்று சுண்ண மொன்றாய்க்கூட்டி - முறையோடே குடத்துநீர் விட்டு ஆட்டி, சாட்டிவைத்து வில்லையது தட்டிக்காய்ந்தால் - தன்மையுள்ள ஓட்டில்வைத்து ஓடுமூடே. (35)

மூடியே சீலமண் வலுவாய்ச்செய்து-முக்யமுடன் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளு, சாடிநன்றாய்ச் சுண்ணமதிற் சாரஞ்சேர்த்து-சந்திரனிற் பனியில்வைக்கச் சலமுமாகும், வாடிநன்றாய்ச் சலமதனை யெடுத்துக்கொண்டு-மாட்டுவாய் மூன்றுமங்கே சேர்ந்தசுண்ணம், கூடிநன்றாய்ச் சித்தண்டத் திடைக்குரெட்டி - கூட்டுவாய் சுண்ணமதிற் செயநீர்வாரே. (36)

வார்த்துமே நவநாளும் ரவியில்வைக்க-வளமான சித்தண்டஞ் சுண்ணமாச்சு, காத்துமே சுண்ணமதைப் பதனம்பண்ணிக் - கண்மணியே மூன்றாமிக் காண்டந்தன்னில், கோர்த்துமே சொன்னதொரு பூனீர்தன்னைக் - கூடவே சேர்க்கும்வகை சரக்கைக்கேளு, பார்த்துமே கோரோசனை குங்குமப்பூகூட்டிப்-பாகான சாதிக்காய் சாதிப்பத்திரியாமே. (37)

ஆமப்பா யிலவங்கம் யேலஞ்சுக்கு-அப்பனே வால்மிளகு கிராம்புதானும், சேமப்பா வகைக்குஒரு பலமதாகச்-சேர்ந்திடைக்குப் பரங்கியுட பட்டைசேரு, காமப்பா யிவையெல்லாந் தூளாச்செய்து-கனிவாக ஆவின்நெய் விட்டுக்கிண்டு, நேமப்பா குளம்புபோல் வருதல்கண்டு-நேர்மையுடன் கண்டிடைக்குச் சீனிசேரே. (38)

சேரநன்றாய்க் கிண்டையிலே மெழுகுபோலாம் - திரும்பெடுத்துக் குழியம்மி தன்னிற்போட்டு, ஆரநன்றாய் ஆவிநெய்யை விட்டுஆட்டி - அப்பனே மெழுகுகண்ட யிடைக்குச்சூடன், சோரநன்றாய் மூன்றுமங்கே சேர்ந்தசுன்னம் - துடியாக நூற்றுக்கு ஒன்றுபோடு, வாரநன்றாய்க் காண்டத்திற் சொன்னபூனீர் - மக்களே ஐம்பதுவுக் கொன்றுபோடே. (39)

ஒன்றங்கே போட்டுநன்று யாட்டும்போது - உத்தமனே ரவிசலத்தை விட்டுஆட்டி, கண்டங்கே குடத்துநீர் பதியவிட்டால் - கயிலாச மெழுகாகும் வலுவோமெத்த, பெண்டங்கே பிள்ளையுட ஆசைதள்ளிப் - பேதமையாய் நினையாம லோர்மைகொண்டு, வண்டணியும் பூமுலையாள் நாதனீர்க்கு - மகாகோடி ஞாயமங்கே வரிசிப்பாரே. (40)

வரிசிப்பார் தவமுனிவர் சித்தரெல்லாம் - வகையறிந்த பெரியோர்கள் நாமங்கோடி, தெரிசிப்பா ரவரவர்க ளறிந்தபேரைச் - செப்பினூர் மானிடரோ காணப்போறார், உரிசையுடன் பெண்டு பிள்ளை ஆசைகொண்டு - உரவாடி மாயையிலே சிக்கினோர்கள், பரிசையுட னிவ்வாசை யெல்லாந்தள்ளி - பாய்ச்சடா செந்தூரம் பதிவாய்ப்போடே. (41)

போட்டுநன்றா யாட்டியெடு தேவிபூசைப்-புகழ்பெறவே வைத்தெடுத்துப் பதனம்பண்ணி, கோட்டுமுலை மாதாவைத் தொழுது போற்றிக் - கொண்டிடுவாய் குன்றியிடை சிவனைநோக்கி, மாட்டுவாய் மண்டலங்கள் தின்றுவாநீ - மைந்தனே பச்சரிசிப் பயறுமாகும், கூட்டுவாய் ரவிநெய்யும் பாலுமாகும் - குணமாகக் கொண்டுவரத் (தேக) சித்தியாமே. (42)

ஆமப்பா அந்திசந்தி கொண்டுபாரு - அமுரியது காலையிலே அப்பாகொள்ளு, போமப்பா தேகமதிற் பீடைபோச்சு - பூட்டுகிறேன் பிரமமென்ற தீக்ஷைதானும், நாமப்பா சூடனது பலமும்பத்து-நன்றாகக் குங்குமப்பூ சாதிக்காயும், கோமப்பா கோரோசனை வகையொன்றுக்கு - கூட்டுவாய் பலமொன்று கூடச்சேரே. ()

பிரமஉப்பு.

சேரடா பிரமமென்ற உப்புத்தானும்-சேர்ந்தயிடை நூற்றுக்கு ஒன்றுபோடு, ஆரடா சித்தண்டம் நூற்றுக்கொன்று - அப்பனே சீனியது பத்துக்கொன்று, கோரடா நெய்விட்டு நன்றாயாட்டிக் - கோதையென்ற பெண்கொடியாள் கிருபையாலே, வாரடா மண்டலங்க ளிரண்டுகொண்டால் - மக்களே சிவயோக வாழ்க்கையாச்சே.

ஆச்சடா சிவயோக வாழ்க்கையாச்சு - அப்பனே சித்துநிலை ஒருவனாச்சு, போச்சடா யேமனென்ற பயமும்போச்சு - பொல்லாத பாசவினை யத்துப்போச்சு, காய்ச்சடா சோதியொளி காணலாச்சு-கடந்துநின்ற மெய்ஞ்ஞானம் வலுத்துப்போச்சு, பாய்ச்சடா பிர்மமென்ற கற்பந்தானும் - பழுதுவரா தொருநாளும் பாருபாரே.

பழுதொருநாள் வாராது கற்பக்கூரு - பார்த்தவர்க்கு யெளிதல்ல பரம்பொருளாகும், நழுவாது சடலமது வலுத்துப்போச்சு-நரம்புகளுஞ் சதையிறுகி முறுக்குமேறும், விழுகாது சோதியொளி தீபங்காணும் - விசைகொண்டு யேறுமடா வாசிதானும், அழுகாது அஞ்சுபஞ்ச பூதந்தானும் - அப்பனே வீடுபல மாச்சுபாரே. (46)

வீடுபல மாவதுதா னேதனாலே - வேதமென்ற ஓங்காரங் கொண்டதாலே, காடுபல மாவதுதா னேதனாலே - கானகத்தில் புலியிருந்த மகிமையாலே, நாடுபல மாவதுதா னேதனாலே - ராசனுட நீதியங்கே யிருந்ததாலே, பூடுபல மாவதுதா னேதனாலே- பொழிந்தமழை சொரிந்ததினாற் புகழுண்டாச்சே. (47)

ஆச்சப்பா வீடழிந்து போனதென்ன - அடிப்படையும் பெ மில்லாத் தோசத்தாலே, காச்சப்பா காடழிந்து போனதென்ன கானகத்தில் காவலொன்று மில்லாதாலே, நாச்சப்பா நாடழிந்து போனதென்ன - ராசனுட கேள்வியங்கே யில்லாதாலே, போச்ச ப்பா பூமெர மத்துப்போகப்-பொழிந்தமழை யில்லாத புதுமைதா னே. (48)

புதுமையென்ற ஆசையெல்லா மடித்துத்தள்ளிப்-போற்றுவாய் ஞானமென்ற யோகந்தன்னை, புதுமையென்ற ஆசையது யிருக்கு மாகில் - பாழ்நரகில் வீழ்ந்திடுவாய் சொன்னேனப்பா, ததுமை யென்ற ஆசையிலே யிருந்தபேர்கள் -தான்வாழ்ந்த பேருமுண்டோ சொல்லிடாய்நீ, கதுமையென்ற சிவயோக ஆசைகொண்டால் - காணலா மதிசயங்கள் காணலாச்சே. (49)

காணலாம் சித்தினுட மகிமைமெத்தக்-கண்டவர்கள் விண்டதி ல்லை விதியுள்ளோர்கள், தோணலாம் விதியென்ன மனமேயாச்சு - தோணுமடா சித்தருக்குத் தோணுந்தோணும், ஆணலாம் நல்லபி ள்ளை யானல்மக்காள் -அப்பவல்லோ உனக்குஉப தேசம்வைப்பார், பூணலா மனதுறுதி யாகநின்றால் - பூணுமடா சிவயோகம் பூணும் பாரே. (50)

சிவயோக மாவதென்ன மனமேயாச்சு-தீங்கொன்றும் நினையா த மனமேயானல், தவயோக மதுவாச்சு வுள்ளேயுண்ட - சடல மது வனுவாச்சு சண்டிமாடே, பவயோக மாவதுதா னேதுக்காகு ம் - பாயாது மற்றதொரு கற்பந்தானும், தவயோகஞ் சிவயோகம் வாசியோகம் - தளம்பாது வினைபல மாகும்பாரே. (51

சத்திசிவவுப்பு

வினைபல மாகுமடா சத்திசிவதீட்சை - வேண்டியே சூடனது பத்துக்கொன்று, ஆனைபல மாகுமடா ரெண்டுஞ்சேர்த்து - அப்ப னே குடத்துநீர் விட்டுக்கிண்டு, கானைபல மாகுமடா ரவியில்வை க்கக் - கண்கொள்ளாச் சுண்ணமுமாங் கடுமைமெத்த, வானைபல மாகுமடா குங்குமப்பூ - வளியான கேரோசனை பத்திரியுமாமே. ()

ஆமப்பா யிலவங்கம் சாதிக்காயும்- அப்பனே ஏலமுடன் கிரா ம்புதானும், வேமப்பா வகைக்குஅஞ்சு பலமேகொண்டு-வெள்ளெ ருக்கின் வேர்தூரும் சரியிடையாய்க்கொண்டு, போமப்பா கூடிய தோ ரிடைக்குப்பாதி - பூட்டிடுவாய் சீனியது ஆவிநெய்யாலாட்டு, வாமப்பா மெழுகுபோ லாட்டிக்கொண்டு - வளமாகச் சத்திசிவ சுண்ணஞ்சேரே. (53)

சேரடா மெழுகுஜம் பதுக்கு ஒன்று-சித்தண்டச் சுண்ணமது நூற்றுக்கொன்று, மாரடா சிவந்தமான் பாலைவிட்டு-மாட்டியபரை யிருசாம மயனம்போலே, காரடா குடத்துநீர் விட்டுநன்றாய்-கலந் தரைப்பாய் நால்சாமம் கனிவாய்த்தானும், பாரடா வளி த்துருட்டிச் சிமிழில்வைத்து-பரம்பொருளே மெழுகெனவே வைத் துப்போற்றே. (54)

போற்றியே பூசைதனில் வைத்தெடுத்துப்-புண்ணியனே சிவ ன்செயலென் றெண்ணிக்கொண்டு, ஆற்றியே மனமோர்மை யாக நின்று - அப்பனே பிரபஞ்சம் பொய்யென்றெண்ணி, சாற்றியே தமர்வாசற் குள்ளேநாவை - தானொடுக்கி வாசியைத்தான் சுழினைக் கேற்றி, மாற்றியே மெழுகுதனிற் குன்றியுண்ண - மக்களே சடல மது வலுத்துப்போச்சே. (55)

வலுவாகு மண்டலந்தான் மூன்றுகொண்டால் - வாசிபலமா வதைத்தா னென்னசொல்வேன், சலுவாது சடலமது யிறுகிப் போகும்-தளதளத்து மேனியெல்லாந் தங்கமாகும், மளுவாகும் மாயையெல்லாம் விலகிப்போகும் - வஞ்சனையாய்ச் சொல்லுகின்ற கூத்தன்போனான், கொலுவான மும்மூர்த்தி யானகற்பம்-கொள் ளுதற்கு வகைசொல்வேன் கூர்ந்துகேளே. (56)

மும்மூர்த்திமெழுகு.

கூர்ந்துகேள் மும்மூர்த்தி யானபூவைக்-கொண்டுவந்து அதிற் சேர்க்கும் வகையைக்கேளு, சார்ந்துகேள் சூடனிடை பத்துமா னல்-தன்மையுடன் பூத்தபூ வொன்றுபோடு, கார்ந்துகேள் குங்கு மப்பூ கோரோசனையேலம்-கனிவான சாதிக்காய் சாதிப்பத்திரி, சேர்ந்துகேள் வகைக்குஅஞ்சு பலமுங்கொண்டு - செம்மையுடன் சிவன்வேம்பு உப்புமாமே. (57)

உப்புமது சரியிடையா யெடுத்துக்கொண்டு-உத்தமனே ஆவி னெய்யால் நன்றாயாட்டி, அப்புமது சூடனது சேர்ந்தசுண்ணம்- அரைத்ததொரு மருந்துக்கு நூற்றுக்கொன்று, செப்புமது மரு ந்தையெல்லா மரைத்துநன்றாய்-சேரடா குடத்துநீர் விட்டுக்கிண்டி, தப்புமோ ரவியில்வைத்துக் கிண்டும்போது - தான்போடு சித்தண் டச் சுண்ணந்தானே. (58)

சுண்ணமது நூற்றுக்கு ஒன்றுபோடு - துவளவே கிண்டிவிடு நவநாள்தானும், அன்னமது போற்சிவந்த ரசசெந்தூரம் - அப் பனே அம்பதுக்கு ஒன்றுபோடு, கன்னமது குடத்துநீர் விட்டு நன்றாய் - கண்மணியே ரவிதனிலே நவநாள்தானும், சொர்ன மது போற்சிவந்த மெழுகுதன்னைச் - சோதிமனோன் மணியாள் க்குப் பூசைபண்ணே. (59)

பூசையது வர்க்கவகை யெல்லாஞ்செய்து - புண்ணியனே பர தேசிக் கன்னம்போடு, மூசையது செய்துகொண்டு மண்டலந்தா னூ - முக்கியமாய்க் கொண்டுவிடு வாசிபலமாகும், காசையது பொருளாக யெண்ணவேண்டாம் - கனிவான சிவயோகம் வலுத் துப்போச்சு, பேசினதோ ருப்பினுட வலுமைமெத்த-பெண்கொடி யாள் சொன்னவித்தை பிலமாம்பாரே. (60)

வேத உப்பு மெழுகு.

பிலமாக யின்னமொரு கருவைச்சொல்வேன் - பேதமில்லா வேதமென்ற தீட்சைமார்க்கம், குலமான உப்பினிடை யொன்றே யானல் - கூட்டுவாய் சூடனது பத்துவீதம், வளமான குடத்து நீர் விட்டுநன்ருய் - மக்களே ரவியில்வைத்துக் கிண்டிப்பாரு, சில மான உப்பதுதான் சுண்ணமாகும் - சேரடா சத்துச்செந் தூரந் தானே. (61)

செந்தூரம் பத்துக்கு ஒன்றுபோடு - தீவினைக ளகற்றுகின்ற சுண்ணந்தன்னில், கொந்தூரம் பத்துக்கு ஒன்றுபோடு - குங்கு மப்பூ கோரோசனை சாதிக்காயும், பந்தூரம் வால்மிளகு சாதிப்பத் திரி - பலமஞ்சு தானெடுத்துப் பாதிச்சீனி, முந்தூரஞ் செய்த தொரு மருந்திற்சேரு-முக்கியமடா ஆவின்நெய்யால் நன்ருயாட்டே

ஆட்டுவாய் தேவிமுன்பு வைத்துப்போற்று - அப்பனே சிவனை யங்கே நினைந்துகொண்டு, மூடியே மண்டலந்தா னஞ்சுங்கொண் டால் - முனையான சுழிமுனையிற் தீபந்தோணும், நாட்டிலே நின் றதினல் மாயைபூணும் - நல்லதல்ல மலையேறி வாசம்பண்ணு, கூட்டிலே நின்றதொரு பஞ்சபூதம் - குரங்கதுபோற் சொன்னபடி கேட்கும்பாரே. (63)

பூதஉப்புமெழுகு.

கேள்க்குமே பஞ்சபூத தீட்சைதானும்-கெட்டியடா கற்பமது கெட்டியாகும், வாள்க்கையென்ற அய்ங்கோலக் கருவின்வண்ணம்- மக்களே சொல்லுதற்கு நாவோயில்லை, தோள்க்கையென்ற உரு வெடுத்த கற்பமாச்சு-சொல்வார்கள் சொல்வார்கள் பெரியோர்தா னும், மாள்க்கையென்ற உப்புக்குப் பத்துச்சூடன் - மாட்டடா குடத்துநீர் விட்டுக்கிண்டே. (64)

கிண்டையிலே சுண்ணமதாம் பொங்கிநீரும் - கெதிகொடுத்த சுண்ணமது வலுவோமெத்த, பண்டையிலே ரசத்தினுட செந்தூ ரந்தான் - பாய்ச்சடா அம்பதுக்கு ஒன்றுபோடு, குண்டையிலே குடத்துநீர் விட்டுக்கிண்டு - குணமாக ரவிதனிலே நவநாள்வைத்து, துண்டையிலே சித்தண்டச் சுண்ணம்போடு - துடியாக நூற்றுக்கு ஒன்றுபோடே. (65)

போட்டுநன்ருய் ரவிதனிலே நவநாள்வைத்துப்-புண்ணியனே குங்குமப்பூ கோரோசனேசேர்த்து, மாட்டுநன்ருய் சாதிக்காய் சாதிப்பத்திரி - மக்களே வால்மிளகு பலமஞ்சாக, கூட்டிநன்ரு யாவினெய்யை விட்டுக்கிண்டு - குணமான ரவிசலமுங் கூடவிட்டு, வாட்டியே குடத்துநீர் விட்டுஆட்ட - வரிசையாய்த் தேவிமுன்பு வைத்துப்போற்றே. (66)

போற்றியே மண்டலந்தா னுறுகொண்டால் - புண்ணியனே சித்தரிலே ஒருவனுச்சு, மாற்றியே சித்தர்களும் வந்துபேசி - மதியுனக்கு நன்ருக வளமாய்ச்சொல்லி, தேற்றியே கற்பத்தின் வலுமையெல்லாம் - திடமாகச் சொல்லிவைத்து நிலையுஞ்சொல்லி, ஆத்தியே அருகழைத்து முத்தமிட்டு-அப்பாலே காயாச மீவார்பாரே. ()

ஈவாரே பேருமிட்டுச் சபையில்நின்று-எல்லோருங் கொண்டாட்டியின்பமாக, நேவாரே நேசமதாய்ப் பழக்கமாகி – நினைத்திடவே போமென்று வாக்குச்சொல்லி, ஆய்வாரே அவர்களுடன் பின்னே சென்று-அடுத்துஉர வாடியல்லே மலைகள்தோறும், மாய்வாரே சித்தினுட மகிமைகண்டு-மக்களே சகஸ்த்திரத்தின் பூவைவாங்கே.(68)

சகஸ்திர உப்புமெழுகு

பூவாங்கிச் சூடனுடன் பத்துக்கொன்று - பூட்டிவைப்பாய் குடத்தினுட சலத்தைவிட்டு, மாவாங்கிச் சித்தண்டச் சுண்ணம் போடு-மக்களே ஐம்பதுக்கு ஒன்றுபோடு, சீவாங்கி ரசத்தினுட செந்தூரந்தான்-சேரடா பத்துக்கு ஒன்றுபோடு, காவாங்கி மாதளம்பூ சரக்கொன்னைப்பூ-கானகத்தி னுவரம்பூ செம்பரத்தம்பூவே.()

பூவாகுங் குமரியுட பூவுமாகும் - பொருந்திநின்ற பூவையெல்லாந் தூளாய்ப்பண்ணி, ஆவாகும் வகைக்கஞ்சு பலமேகொண்டு-அப்பனே முன்மருந்தில் சேர்த்துஒன்ருய், காவான குங்குமப்பூ கோரோசனைகூட-கட்டான சாதிக்காய் சாதிப்பத்திரி, மாவாகும் வால்மிளகு வகைக்கு அஞ்சு - மக்களே பலமெடுத்து வகையாய்ச்சேரே. (70)

வகையாக யிதுவெல்லாம் ஆவின்நெய்யால்-மாட்டிநன்ரு யரைத்தெடுத்து வளமையாக, துகையான குடத்துநீர் விட்டுக்கிண்டு-துவளவே கிண்டிவிடு ரவியில்வைத்து, தகையான ரவிசலத்தை விட்டுக்கிண்டு-தன்மையுடன் மெழுகதுபோ லாகும்பாரு, நகையான மெழுகெடுத்துத் தேவிமுன்பு - நன்ருய்வைத் தெடுத்தெழுமண் டலமுமுன்னே. (71)

உண்ணயிலே தேகமது சித்தியேகேள்-உத்தமனே நரைதிரையு மாறிப்போச்சு, வண்ணமுள்ள தேகமதி னொளிவையென்னல்-வலியுருத்திச் சொல்வதற்கு நாவோயில்லை, எண்ணுவது தேகமதி லழுக்கெடுத்து-இதமாகச் செம்புவெள்ளி தன்னிலீயே. (72)

வாரவுப்பு.

ஈவதுதான் மாத்தென்ன மூவஞ்சாகும் - என்மகனே தேகமது யிறுகிப்போகும், மாய்வதுதா னென்றுமில்லை மகனேசொன்னேன்-வையகத்தில் நீயுமொரு சித்தனுவாய், சாய்வதுதான் வாரமென்ற பூவைக்கொண்டு-சகலசித்து மாகுதற்கு வகையைக்கேளு, ஒய்வதுதான் முன்சேர்ந்த படியேசெய்து-உத்தமனே உண்டுவரச் சிவயோகமாமே. (73)

சிவயோக வாழ்க்கையிலே யிருக்கவேணும் - சித்தரென்று பேராகித் திரியவேணும், கவயோக மானகலி யுகந்தானப்பா - கபடமிஞ்சி வஞ்சகமுஞ் சூதுமாச்சு, தவயோக மானதொரு மனிதர்வாழ்க்கைச்-சண்டாளா சேராதே விலகிநில்லு, உபயோக மொன்றுமில்லை பிரபஞ்சத்தில் - உத்தமனே கண்டுகொண்டு விலகுவாயே. (74)

விலகுவதா லுனக்குவெகு புண்யமப்பா - வேதாந்த சடலமது கனிவோயில்லை, பழகுவது சுழிமுனையிற் பழகவேணும் - பறந்தோடும் வாசியைத்தா னிறுத்தவேணும், சளகுவது கற்பமறிந்துணரவேணும் - சண்டாள மாயையெல்லாந் தள்ளவேணும், குளகுவது பிரபஞ்சம் பொய்யென்றெண்ணிக்-குடியிருந்த வீடதனைக் குணமாய்ப்போற்றே. (75)

போற்றின லுலகத்தி லதிசயங்கள் - புண்ணியனே கண்டுமனமகிழ்ச்சிகொண்டு, ஆத்தினற் தேசமது அனந்தமுண்டு - அந்தந்தத் தேசத்தி லதிசயங்களுண்டு, பார்த்துமே சித்துவிளை யாடிக்கொண்டு-பரமசிவன் சபைதனிலே வாசமாகிக், கூத்தனென்ற கூத்தனுக்குங் கூத்தனுகிக்-கோடியுகஞ் சித்திலிருந் தாடுவாயே. (76)

திசையுப்பு.

ஆடுவாய் திசையுப்பு யெடுத்துக்கொண்டு - அப்பனே முன்சேர்த்த படியேசேர்த்து, நாடுவாய் மனேன்மணியைத் தோணுது போற்றி - நலமான சிவயவசி யென்றேயோதி, தேடுவா யில்லரத்திற் தனித்திருந்து-சிவசிவா வென்றேதான் மனதிலெண்ணி, கூடுவாய் கற்பமது கொள்ளும்போது - குருபூசை சிவபூசை குணமாய்ச்செய்யே. (77)

செய்யப்பா மண்டலங்க ளொன்றுதானும் - தேகமது அழி வதில்லை ஒருபோதுந்தான், மெய்யடா சத்திசிவன் சொன்னகற் பம் - வேதமது நின்றிலங்குங் கற்பமாகும், பொய்யப்பா சொல் லவில்லை மனிதர்வாழ்வு - புத்திகெட்டுப் போனதினால் கருவைநா னும், ஒய்யப்பா ஒழியாமல் வெளியாய்ச்சொன்னேன் - உத்த மனே கற்பமறிந் துண்ணுவாயே. (78)

உண்ணுவாய் உனக்கொருவ ரெதிரியுண்டோ - உத்தமனே நீயுமொரு சித்தனுவாய், பண்ணுவா யஷ்டசித்தும் சித்தியாகும்- பார்மகனே கயிலாச தேகமாகும், சண்ணுவாய் பிரபஞ்சம் உன் னைக்கண்டால் - சற்குருவோ தவமுனியோ ரிஷியோவென்று, குண்ணுவா ருனைக்கண்ட பேர்களெல்லாம் - குருவென்று வெகு வணக்கம் வணங்குவாரே. (79)

வணங்குவா ருனக்குஉப சாரஞ்செய்வார் - மனங்கொண்ட படிநடந்து வார்த்தைகேட்பார், இணங்குவா ருலகத்தோ ரேவல் கேட்டு - எல்லோருங் கைகட்டிப் பணிந்துபோற்றி, சுணங்குவா ருலகத்தி லுள்ளபேர்கள் - சுந்தரமே யென்குருவே யென்றுசொ ல்லி, மணங்குவார் மாயைதனி லாசைமிஞ்சி - வாழ்ந்திடும்பே ரு ன்சமுகங் கண்டோர்தானே. (80)

நவக்கிரக உப்பு.

தானென்ற நவக்கிரக தீட்சைமார்க்கம் - சாற்றுகிறேன் புவி தனிலே தரணியோர்க்கு, வானென்ற உப்பிடைக்குப் பத்துச்சூட ன் - மாட்டுவாய் குடத்துநீர் வளமாய்விட்டு, தேனென்ற சித்த ண்டச் சுண்ணமப்பா-திடமாக ஐம்பதுக்கு ஒன்றுபோடு, வானெ ன்ற ரசத்தினுட செந்தூரந்தான் - மக்களே பத்துக்கு ஒன்று போடே. (81)

ஒன்றான யேனமதில் வைத்துக்கொண்டு - உத்தமனே குடத் துநீர் விட்டுக்கொண்டு, நன்றான ரவிதனிலே நவனாள்வைத்து - நடத்தடா அடிக்கடிதான் கிண்டும்போது, குன்றான மெழுகான பதமுமாகும் - கூட்டடா ஐந்துவகைப் பூவைவாங்கி, சென்றான ரவியில்வைத்துக் காய்ந்ததானால் - செம்மையா யிடித்துத்தூள் வடிகொள்வாயே. (82)

வடிகொண்ட தூளதுவும் வகையொன்றுக்கு - வாங்கடா பல மைந்து யெடுத்துக்கொண்டு, துடிகொண்ட சரக்கைந்து தூளா ய்ச்செய்து - சூட்டுவாய் வகையைந்து பலமதாக, கடிகொண்ட யிவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துக்-காராவின்நெய்யாலே நன்றா யாட்டி, முடிகொண்ட ரவிசலத்தை விட்டுநன்றாய் - முத்திபெற நவநாளும் வைத்துக்கிண்டே. (83)

கிண்டையிலே மெழுகதுபோ லிருக்கும்பாரு-கெதிகொடுத்த மாதளம்பூ நிறத்தாள்கொங்கை, வண்டணியும் நிலப்பயிரின் குடத்துநீரை - வாங்கியே விட்டுநன்ருய்க் கிண்டும்போது, அண்டர்பிரான் சிவகிருபை மகிமையாலே - அப்பனே செந்தூர மெழுகுமாகும், கண்டபடி யானுரைத்தேன் கபடில்லாமல் - கருத்துவைத்துச் சொன்னதிந்த மெழுகுமாமே. (84)

மெழுகெடுத்துத் தேவிமுன்பு வைத்துப்போற்று - மெய்ஞ்ஞான பூரணத்தை மனதில்வைத்து, மழுவெடுத்த சிவன்பாதம் வைத்தெடுத்து - மக்களே மனம்புத்தி ரெண்டுமொன்ருய், தொழுதெடுத்துக் குருபதமே கெதியென்றெண்ணித் - தொண்டுசெய்து மெழுகைவைத்துப் பூசைபண்ணி, அழுதெடுத்த செந்தூர மெழுகுதன்னை - அப்பனே குன்றியுண்ணு அமுரிகொள்ளே. (85)

அமுரி விபரம்.

அமுரியென்ருல் சிறுபசளே சிவந்தபூடு - அப்பனே சிவந்த நிலந் தனில்வளர்ந்தால், குமரியெனும் வாட்டமில்லா வளர்ந்தபூடு - கொண்டுவந்து சாறதிலே குணமாய்வாங்கி, கமுரியென்ற வால்மிளகு பத்துமுறை தீட்சை - கண்மணியே செய்துகொண்டு தூளாய்வாங்கி, வமுரியென்ற சாறதிலே தூளேப்போட்டு - வணக்கமுடன் காலேயிலே கொண்டுவாவே. (86)

கொண்டுவர உன்தேகம் ஒருபோதுந்தான் - குறைவதில்லே அழிவதில்லே வலுவோமெத்த, பண்டுதான் விந்துவிட்ட நேரமென்று - பகரலேயோ யிக்கருவை முன்னோர்தானும், கண்டுபார் பெருமீனுஞ் சிறுமீனுக்கு - கதைபோலே உலகமதி லிரையாமென்று, உண்டுபா ரென்றுசொல்லிப் பிரபஞ்சத்தில் - உத்தமனே சொல்லுவது கேட்டிலாயோ. (87)

கேட்டுமதி கெட்டதென்ன மாயையாலே - கெதிமோக்ஷ மில்லாத அறிவினலே, கூட்டுவது நாதவிந்து சேர்ந்ததாலே - கோதையென்ற பெண்கொடியாள் மகிமையாலே, ஆட்டுவதும் பிர்மமென்ற பிண்டத்தாலே-அப்பனே சிவரூப மானதாலே, வாட்டுவது யிந்த வுடல் கொள்ளாதாலே - மயங்கியல்லோ பிரபஞ்ச மாயையாச்சே.

தச உப்பு.

ஆச்சப்பா தசதீட்சை மார்க்கந்தன்னே - அப்பனே அறிந்தமட்டு மறிவிப்பேனுன், எச்சப்பா தசஉப்பை யெடுத்துக்கொண்டு என்மகனே சூடனிலே பத்துக்கொன்று, வாச்சப்பா சித்தண்டச் சுண்ணந்தானும் - வளமான ஐம்பதுக்கு ஒன்றுபோடு, காய்ச்சப்பா ரசத்தினுட செந்தூரந்தான் - கட்டாகப் பத்துக்கு ஒன்றுபோடே.

போடப்பா மூன்றுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு - புண்ணியனே குடத்துநீர் விட்டுநன்றாய், நாடப்பா ரவிதனிலே நவநாள்வைத்து-நன்றாகக் கிண்டிவிடு கையோயாமல் வாடப்பா மெழுகான பதத்தைப்பார்த்து-மைந்தனே ஐந்துவகைப் பூத்தூள்போடு, கூடப்பா சரக்குவகை ஐந்துதூளும் - கூட்டிவிடு பலமைந்து வீதந்தானே. (90)

தானென்ற நெய்யாலே நன்றாயாட்டிச் - சற்குருவைத் தொழுதுகொண்டு மெழுகைவைத்து, வானென்ற ரவிசலத்தை விட்டு நன்றாய் - வளமாகக் கிண்டிவிடு நவநாள்தானும், தேனென்ற குடத்துநீர் வளமாய்விட்டுத் - தேன்மொழிக்குப் பூசைசெய்து வருகும்போது, கோனென்ற குருவங்கே வந்துசேர்வார் - குருபூசை சிவபூசை குணமாய்ச்செய்யே. (91)

செய்துகொண்டு அவர்பதத்தில் மெழுகைவைத்துத் - தேவியென்ற யீஸ்வரியாள் பூசைசெய்தால், கொய்துகொண்ட குருவாக்கால் மகனேபாலா - குழந்தையென்ற சிவரூபி அருகில்வாவா, நய்துகொண்ட மெழுகெடுத்துக் கையிலீந்து - நன்றாகச் சித்தினுட மகிமைபெற்று, எய்துகொண்டு யென்னுளுஞ் சிவகிருபை பூண்டு - இருந்துலகந் தனில்வாழ்ந்து யிருப்பாய்நீயே. (92)

நீயிருப்பா யென்றுசொல்லி வாக்குப்பெற்று - நினைத்திடத்தில் ஒடுக்கமது செய்துகொண்டு, தாயிருக்கப் பிள்ளைமனம் நோமோசொல்லு - தனியொருவ னாயிருந்து தபத்தைப்போற்று, காயிருக்கக் கனியிருக்கப் பசியுண்டாமோ - காணலாம் உலகமதில் தோணமட்டும், பூவிருக்கப் பிஞ்சிருக்கத் தேகம்போன - புதுமையைத்தா னின்னதென்று கண்டிப்பேனே. (93)

கண்டிலேன் பாசமதுக் குட்படாதே - கண்கேடு மதிகேடு ரெம்பவுண்டு, விண்டிலேன் திரண்டமணி மயங்கும்போது - வீணாகும் நீசெய்த தவங்களெல்லாம், கொன்றுவிடு முன்சடல மழிந்துபோகும் - கூத்தனென்று சொல்லுவது யாரைமைந்தா, கண்டபேர் விந்துவிட்டுக் கெட்டுப்போன-கதையதுவைக் கேட்டிருந்து கலங்கலாமோ. (94)

கலங்காமல் மனமோர்மை யாகநின்றால் - கண்ணிமைக்குக் காணமற் கூத்தன்போனான், மயங்காமல் நிற்பதுவே சிவயோக வாழ்க்கை - வளர்ந்துதடா பிரபஞ்ச மாயைபோச்சு, துலங்காமற் துலங்குமடா குப்பைதன்னில் - தலையாகக் குண்டுமணி மங்குமோசொல், நிலங்காணு மாடுகளே நிலத்தைக்கண்டால்-நிலங்கண்டா லக்ஷணமே உழுதுஉண்ணே. (95)

உழுதுவுண்ண வகைதெரிந்தால் உழுதுவுண்ணு - உழுகமதி யில்லாட்டால் உழுவான்பின்னே, உழுதுண்ண வகைதெரிந்த பேரைக்காத்து - உழுதுண்டா லுன்சடல முலையாதப்பா, பழுது வரா தொருநாளும் பாருபாரு-பரமகுரு பாதமதை யடுத்துக்காரு, நலுவவிட்டா லுன்சடல மழிந்துபோகும் - நழுவாமல் நான்சொன் ன கருவைத்தேடே. (96)

கருவெல்லா முதற்காண்டந் தன்னிற்சொன்னேன் - கட்டாக ரெண்டினிலே வழலைசொன்னேன், உருவெல்லா மூன்றினிலே கற் பஞ்சொன்னேன் !- உத்தமனே யிடைபஞ்சீ கரணஞ்சொன்னேன், மருவெல்லாம் நாலினிலே யோகஞ்சொன்னேன் - மக்களே அஞ்சி னிலே மார்க்கமெல்லாம், குருவெல்லா முடிக்கும்வகை வெளிய தாகக் - கூறுவேன் வெளியாகக் கூறுவேனே. (97)

கூறுவே னின்னூலைப் பார்த்தபேர்க்குக் - குருத்தோணும் கருத்தோணும் மறைப்பெல்லாந்தான், ஆறுவேன் வெளியாக நன் ருய்த்தானும் - அப்பனே பசளைகட்கு மறிவாய்த்தோணும், ஏறு வான் துரையறிந்து யேறும்போது - எவ்வளவுஞ் சொற்குறைவு வாராமற்ருன், மாறுவான் சிவயோக வாழ்க்கைநின்று - மனம் போலே நினைத்தபடி முடிப்பான்பாரே. (98)

முடிப்பானே சித்தில்வெகு அதிகமாகும் - மோக்ஷநிலை காண வல்லோ தெளிவுமாகும், படிப்பானே சகலபொரு ளவனேகாண் பான் - பாசவினை மாயையெல்லாம் பதரிப்போகும், அடிப்பானே யேமனென்ற யேமன்ருனும் - அடிதொழுது தெண்டனிட்டு வணங் குவான்பார், மடிப்பானே சித்தர்வந்து வார்த்தைசொல்லி - மன மகிழ்ச்சி யாயிருந்து வாழ்வான்பாரே. (99)

வாழ்வதற்கு யிந்தநூல் பயனறிந்து - மகாவிணையம் வைத்துநீ மருவிப்பார்த்தால், ஆழ்வதற்குச் சிவயோக வாழ்க்கைபெற்று - அருமையென்ற கற்பத்தி னறிவைப்பெற்று, மூழ்வதற்கு அஷ்ட சித்து மாடப்பெற்று - முத்திபெற்று பூர்வமதிற் சுழினைபெற்று, தாழ்வதற்குச் சத்தியடி பதமும்பெற்றுத் - தானவனுய் நீயிருந்து வாழ்வாய்தானே. (100)

தானென்ற காண்டமது நாலிற்ருனும் - சகலஉயிர் வாழ்வ தற்கு யோககற்பம், தேனென்ற தேவியுமை பாதங்காணச் !- செப் பினேன் மவுனநிலை திறமாய்ச்சொன்னேன், மானென்ற ஐந்தி னிலே கருவையெல்லாம் - வகைதோணக் காண்பதற்கு மனதுகூர் ந்து, நானென்ற ஆணுவத்தைப் போக்கிநன்ருய் - நாமென்ற நாலாங்காண்டம் யோகமுற்றே. (101)

நாலாவது காண்டம் முற்றிற்று.

உ

குமரன் துணை.

அகஸ்திய மகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பரிபாஷை ஐந்தாங்காண்டம் ௱

தோகையிளங் குயிலாள் தன் வடிவைக்கண்டு - சுந்தரமாய் நின்
றசிவன் பாகம்வைத்து, மோகமதாய்க் கிளிமொழியை அணைந்து
மெள்ள - முத்தியிட்டு அருகில்வைத்த மூர்த்திபாதம், தாகமதா
ய்ப் பதஞ்சலியைச் சென்னிமீதிற் - தான்வைத்துத் தவமுனிகள்
ரிஷிகள்சித்தர், பாகமதை மறைபொருளாய்ச் சொன்னவாக்கிய
ம் - பாஷைகளில் நான்வெளியாய்ப் பாடினேனே. (1)

பாடியதோ ரென்னுவிற் பரமமூர்த்தி - பதிவாகத் தானிருந்
து பயனைக்காண, தேடியதோ ரென்தாயார் யேழைமீதிற் - சித்
தமது இறங்கிநல்ல வாக்குத்தந்தால், நாடியதோர் தமிழுக்கு
மறைவுநீங்க — நாவுதனில் ஈஸ்வரியாள் குடிகொண்டேதான்,
வாடியதோர் முகமதனில் துயில்கொண்டேதான் — மலர்க்கையால்
தடவிவிட்டு மதிசொன்னுளே. (2)

மதிசொன்ன ளென்தாயார் வாமரூபி - மனங்குவிந்து சாஸ்தி
ரத்தின் மறைப்பையெல்லாம், கெதிசொன்னுள் தவமுனிகள் ரிஷி
கள்சித்தர் - கெம்பீர லகிரியினுல் மறைத்ததெல்லாம், சதிசொன்
னு ரிதைப்பார்த்த பெரியோரெல்லாம் - தட்டுண்டு மயங்குவதாற்
சமதியில்லை, விதிகொண்ட பேர்க்குவரு மென்றுசொல்லி - விட்
டலைந்து கெட்டவர்கள் கோடியுண்டே. (3)

கோடியிலே சங்கையுண்டோ கோடாகோடி - குருமுறைக
ளறியாமல் அலைந்தோர்கோடி, வாடிமனந் தளர்ந்துஅலைந் தோர்
கள்கோடி - மனமதுவை உரவுசெய்யா தலைந்தோர்கோடி, நாடிம
னந் தேரும லலைந்தோர்கோடி - நாடுதனிற் கேள்வியங்கே கேட்
டோர்கோடி, பாடியதோர் பொருளுக்குப் பயன்தோன்றுமல் —
பழம்பொருளைச் செலவுசெய்து கெட்டார்தானே. (4)

கெட்டாரே கைபாகஞ் செய்பாகங்கள் - கெடியான நிரைபாகங் கணக்கின்பாகம், விட்டாரே அதினாலே கெட்டார்கோடி - வீணாகக்கூட்டமிட்டு அலைந்தோர்கோடி, சுட்டாரே வீண்கரியுஞ் சரக்கும்போன - சொரூபமதைக் காணாமல் கெட்டார்கோடி, வட்டார மானகனி மாதுதேவி - மனமகிழ்ந்து கிருபைசெய்தால் வாராதுண்டோ. (5)

தேவிபூசை.

வாராதோ யென்தாயார் கிருபைகூற - மனமகிழ்ந்து சொல்லுகிறேன் வரிசையாக, நேராக அறுகோண மிட்டுக்கொண்டு - நின்றநடுக் கோணமதில் ஓங்-கிலீங்-வய-நமசியென்று, தேராதே மேற்கோணம் அங்-இங்-உங்-எங் ஓங்கென்று - திறமாகச் சிங்கென்று திறமாய்ப்போடு, காராதோ மேல்வட்டம் மூன்றுபோடு - கண்மணியே சத்திபிரசன்னமாமே. (6)

பிரசன்ன மாவதுதா னேதினாலே - பிரியமா யோர்மனது கொண்டதாலே, வரசன்ன வர்க்கவகை வைத்துக்கொண்டு - வருந்துவா யொருலெச்ச மாகும்போது, சரசன்ய மானசத்தி பிரசன்னமாகித் - தான்கேட்குங் கேள்வியெல்லாந் தனதாய்ச்சொல்லி, வரசன்ன மானமனோன் மணித்தாய்நல்ல - வாக்கருளிக் கேட்டதெல்லாம் வகைசொல்வாளே. (7)

வகைசொல்வாள் மண்டபத்துக் குள்ளேசெய்ய - வாராளோ யென்தாயார் வருவாள்பாரு, தொகைசொல்வாள் கற்பத்தின் கருவையெல்லாம் - தோணவே மனதிற்கு அறிவிப்பாள்பார், நகைசொல்வாள் வாதமது செய்யும்போது - நன்றாகப் பொருளையங்கே நாடச்சொல்வாள், பகைசொல்வா ளட்டகர்மக் கருவையெல்லாம் - பண்பாகத் தோணுதற்கு வகைசொல்வாளே. (8)

சொல்வாளே லோகமெல்லாம் வசியமாகும் - சொற்பெரிய மனிதரெல்லாம் வசியமாகும், வெல்வாரே புருஷரெல்லாம் வசியமாகும் - மேன்மைபெற ஸ்ரீவசிய மென்னசொல்வேன், கொல்வாரோ சத்துருக்கள் வசியமாகும் - கொடுமையுள்ள மிருகமெல்லாம் வசியமாகும், மல்வாரோ பசாசுமுதல் தேவரெல்லாம் - வசியமடா சொன்னபடி கேட்குந்தானே. (9)

தானென்ற கைவசியைச் சொல்லக்கேளு - தன்மையுள்ள ஐங்கோல வருணியொன்று, வானென்ற மூலக்கொடி (இளமை) யொட்டிசேர்த்து - வளமான கஸ்தூரி மஞ்சள்சேர்த்து, தேனென்ற குங்குமப்பூ கோரோசனைசேர்த்துத் - திடமான கிழங்கினுட தயிலஞ் சேர்த்து, நானென்ற ஆணுவத்தை யொடுக்கிக்கொண்டு - நலமான மதியினுட மெழுகுபோடே. (10)

மெழுகதிலே நூற்றுக்கு வொன்றுபோடு - மேன்மையுள்ள புனுகதிலே பாதிசேரு, நழுகாது முன்சொன்ன தேவிபூசை -நன் றுகச் செய்துமே யெடுத்துக்கொண்டு, சமூவாது புருவமதிற் றில தம்போட்டுத் - தான்போக லோகமெல்லாம் வசியமாகும், மழுவா குந் தேவியுமோ வசியமாகி - மனம்போல நடத்திவைத்து வருவா ள்பாரே. (11)

வருவாளே சிவயோக வாழ்க்கைசொல்வாள் -வரமருளிப் புரு வனடுச் சுழினைகாட்டி, தருவாளே வாதமது செய்வதற்குத்-தன் மையுள்ள கருச்சொல்லிப் பொருளுஞ்சொல்லி, குருவாகத் தானி ருந்து அருகில்வந்து-குணங்குறிகள் காண்பதற்கு மதியுஞ்சொல்லி, திருவான வாலைப்பெண் கிருபையாலே - சித்தர்முனி மறைத்ததெ ல்லாஞ் சிவந்தபூடே. (12)

பூநீருக்கும் நிலம்

சிவந்ததொரு பூமிதனிற் பிறந்தபூடு - சிறுபூடு வாட்டமில்லா வளர்ந்தபூடு, கவந்ததொரு செடியங்கே பூத்தபூவுங் - கண்மணியே பூநீரு அதுவுமாகும், மவந்ததொரு மத்தநிலப் பூமிதன்னில் - மக்களே பூத்ததெல்லாம் பூநீராமோ, அவந்ததொரு அழுக்கெ டுக்கும் வண்ணானுக்கு - ஆகுமல்லால் மற்றொன்றுக் காகாதுபாரே.

ஆகாது அம்மரத்திற் பூத்தபூதான் - அப்பனே பூநீரு அதுவு மாகும், சாகாத காலென்று யிதற்குப்பேரு - சமுசயங்க ளில்லை யடா தாக்கிப்பாரு, போகாத பிரபஞ்ச மிதனாலாச்சு - புத்தி கெட்ட மாடுகளே பொன்விளையும்பூடு, மாகாது மற்றதெல்லாம் பூநீராமோ - மடையனே யிதனாலே வகைசொல்லாரே. (14)

சொல்லார்கள் சித்தரெல்லாம் பலவிதமாய்ச்சொல்வார் - தோணுதோ உங்கள்புத்தி மயங்கிப்போச்சோ, வல்லாண்மை யுள் ளவர்க்குத் தோணும்தோணும் - வஞ்சகங்கள் வினையமுள்ள புத்தி வேணும், கல்லார்கள் ஒருத்தன்கைப் பொருளைவாங்கக் - கபடெ ன்ன சூதென்ன வினையமென்ன, பொல்லாதா னென்றுபேர் கிடை ப்பதல்லாற் - பூமிதனிற் பலனொன்று மில்லைதானே. (15)

இல்லையென்று போவதற்கோ சாஸ்திரங்கள் - இயம்பினு ரிஷி முனிவர் பெரியோரெல்லாம், கல்லையது போற்பரந்து திரிந்தா லென்ன - கபடமுள்ளோர் சாஸ்திரங்கள் கற்றாலென்ன, சொல் லைப்பெரி தாகயெண்ணி மனந்துணிந்து - சுளிசுத்த மாயிருந்து சாஸ்திரத்தைப்பார்த்தால், வல்லையடா பூமிதனிற் கண்டபோகன்- வையத்திற் கேட்டிலையோ மரடேசொல்லே. (16)

சொல்லுவது சாஸ்திரங்கள் யாருக்கென்றால் - துர்ப்புத்தி பொய்சூது கபடுநீக்கி, அல்லுவதெவ் வளவேனு மாசைநீக்கி - அண்டசரா சரங்களெல்லாம் மவனுமாகி, கொல்லுவது யிடர் சூது கொடுமைதள்ளிக்-குவலயத்துப் பெண்களெல்லாந் தாயென் றெண்ணி, மல்லுவது சிவன்செயலே யாகுமல்லால் - மற்றொன்று லாகாதென் றெண்ணுவாயே. (17)

எண்ணுவது நாதனீர் பெருமைதன்னை - இயம்பார்கள் சித்த ரெல்லா மியம்புகின்றேன், பெண்ணுன மயில்குயிலும் உறவேயாடிப்-பேதமையாற் பொங்கிநின்ற நீர்தான்நாதம், கண்ணுவது திரை மறவில் லாமற்சொன்னேன் - கண்டறிந்து கொள்வாய்நீ புத்தியாக மண்ணுவது பிருதிவியாம் உகாரமென்ற-வகையதுவை நான்வெளி யாய் வகுத்தேன்பாரே. (18)

வகுத்ததென்ன அகாரமது மீளிவிந்து - வையகத்தில் பலவித மாய் வகுப்பைச் சொன்னார், தொடுத்ததொரு நாமமது யிதற்குப் பேரு - சொல்லிவைத்தார் தவமுனிவ ரிஷிகளெல்லாம், மகத்து வமாம் சுன்னமென்ற வகைக்கெல்லாந்தான் - மாட்டுவா யணுவ ளவு மாட்டினுக்கால், பகுத்துவமா யிதுநாமம் மகாரமென்றும் - பகர்ந்தமொழி யிதுவாகும் பாருபாரே. (19)

பாரப்பா வெவ்வகையாற் செந்தூரங்கள் - பதிவாகச் செய்யு கிற சமையந்தன்னில், நேரடா நாதமதி லணுத்தொட்டாக்கால்-நேர்மையுள்ள செந்தூரங் கண்ணேகூசும், வாரடா யிதற்குப்பேர் சாரமாகும்-மக்களே சித்தர்சொன்ன மறைப்பையெல்லாம், கூரடா நான்வெளியாய்த் திறந்துசொன்னேன்-கோதையுட கிருபையினாற் கூர்ந்துபாரே. (20)

கூர்ந்துபார் கெந்திவிட்டாற் செந்தூரமில்லை-கொடுமையுள்ள வீரம்விட்டால் சுண்ணமில்லை, சார்ந்துபார் நாதம்விட்டால் சார மில்லை - சதிராக விந்துவிட்டால் காரமில்லை, நேர்ந்துபா ரிதை விட்டுச் செய்வோர்க்கெல்லாம் - நேராது வாதமுதல் வயித்திய மப்பா, ஆய்ந்துபா ரிதுசேர்ந்த தொழிலுக்கெல்லாம் - அணுவ ளவும் பிசகாது அறிந்துபாரே. (21)

அறிந்துபார் கிழங்கினுப்புச் சேராவிட்டால் - அப்பனே வர் ணமங்கே காணாதுபார், செறிந்துபார் பிண்டஉப்பில் காரசாரம்-செம்மையாய்ச் சேர்க்கும்வகை யறிந்தோனுசான், பரிந்துபார் கைபாகஞ் செய்பாகங்கள் - பழகினபேர் செய்முறைகள் தவறி டாமல், சொரிந்துபார் புடவைகளிற் சாயமேத்தும்-சொற்போலே யிதுவுமொரு தொழில்தான்பாரே. (22)

பாரப்பா நாதவிந்தா லெல்லாமாச்சுப் - பரம்பொருளின் குருவான பதியுமாச்சு, ஆரப்பா அறிவார்கள் தேசபாசம்-அடக்கினர் சித்தரெல்லா மதைநான்கண்டு, சாரப்பா யிக்காண்டம் பார்த்த பேர்க்குச் - சமுசயங்கள் தோணுது சார்ந்துபாரு, கூரப்பா நாத மது மண்ணும்மாகும் - குவலையத்தில் விந்துவது வித்துவிரையாமே.

விரையான வித்துக்கும் நாதத்துக்கும் - மேலான தண்ணிவிட்டால் முளையாதோஅய்யா, கரையான தண்ணியென்றால் விந்து விந்து - கட்டான வித்தென்றால் வாசியாகும், குறையாம லிது மூன்றுஞ் சேர்ந்தபோது - குழந்தையென்ற மைந்தனது பிறகாதோசொல், நிரையாகச் சேராட்டால் வயதுசொற்பம் - நிரையாகச் சேர்ந்தவர்க்கு வயது நூறே. (24)

நூறுகும் விந்துவங்கே பாயுமுன்னே, நோக்குமே வாசியது மலருக்குள்ளே, தாறுகும் வாசியைத்தான் முழுங்கிக்கொள்ளும் - தன்மையென்ற சிவரூப மானவிந்து, மாறுகும் பூமலரும் மூடிக்கொள்ளும் - மகிழ்ந்துஉர வாடியல்லோ வளர்ந்தபிண்டம், கூறுகும் யிதுமூன்றும் நிரையாய்ச்சேர்ந்தால் - குழந்தையது நூறுவயதாகும்பாரே. (25)

வயசாகு முன்பின்னாய்ப் சேர்ந்ததெல்லாம் - வாயாது நிரை குறைந்தால் வயதுசொற்பம், கயசாகு மாண்டுவது வலுச்செய்யாது - கணக்குநிரை தப்பிவிட்டால் கசிந்துபோகும், மயசாகுஞ் சிவந்தநிலம் பார்த்துநீதான் - மக்களே கைபாகந் தப்பிடாமல், சுயமாகத் தானிருந்து கிழங்குவாங்கு - சொற்குறைச்சல் வந்ததென்றூற் தூரத்தள்ளே. (26)

தள்ளிவிடு யிதற்குவெகு நாமமுண்டு - தரணிதனிற் சித்தரெல்லாம் வெகுசாய்ச்சொன்னார், அள்ளிவிடு நாதமென்று வுகாரமாச்சு - அப்பனே விந்துவென்று லகாரமாச்சு, துள்ளிவிடு வாசியென்றால் மகாரமாச்சு - தோணுதோ மூன்றுமங்கே சேர்ந்தபிண்டம், தெள்ளியெடுத் தேமறைப்பை நீக்கிச்சொன்னேன் - செயலறிந்து பொருளறியச் செப்பினேனே. (27)

செப்பினே னுதமென்றால் ரவியுமாச்சு - சேர்ந்தவிந்து மதியென்று பேருமாச்சு, ஒப்பினால் வாசியது சுழினையாச்சு - ஓகோகோ நாதமென்றால் மண்தானாச்சு, தப்பினால் விந்துவென்றூற் தண்ணீராச்சு - தளம்பாதே வாசியென்றால் விண்ணுமாச்சு, அப்பினாற் பலவிதமாய்ச் சொன்னார்சித்தர் - அவையடக்கம் வெளிதோண அறிவிப்பேனே. (28)

அறிவிப்பேன் முடிசுண்ணஞ் செய்யும்போது - அப்பனே காரமது அணுப்போல்தாக்கு, தெரிவிப்பேன் சுண்ணவகை செய்யும்போது - சேரடா அணுவளவு காரந்தானும், மரிவிப்பேன் சுண்ணமதிற் காரஞ்சேர - மறந்துவிட்டால் சுண்ணமது யேதுக்காகும், சரிவிப்போந் தொட்டதெல்லாம் வீணுமென்று - சாஸ்திரங்கள் சொல்லுவது கண்டிலாயோ. (29)

கண்டிடவே சுண்ணவகை செய்யும்போது - கண்மணியே வீரமது சேரவேணும், விண்டிடவே காரமது சேராவிட்டால் - வீணுகுஞ் சுண்ணமது யேதுக்காகும், பண்டுதான் சித்தர்சொன்ன பாஷைநீக்கிப் - பாடினதால் சித்தரென்மேற் கோபங்கொண்டு, திண்டுமுண்டாய்ப் பேசியல்லோ பரிபாஷைதன்னைத் - திரவினிற்போடாதுகுகைக் குள்வைத்தாரே. (30)

குகைதனிலே வைத்ததொரு சாஸ்திரத்தைவாங்கிக் - குருமொழியைத் தவருத யோகியோர்க்கு, திகையறவே மறைபொருள்கள் தெரியவேண்டிச் - சித்தர்கையிற் கொடுத்துவைத்தேன் திரட்டையெல்லாம், தகையறவே யவர்வாங்கி சீஷவர்க்கம் - தனிற்கொடுத்துச் சாஸ்திரத்தை வெளிவிடாமல், பகையறவே வேணமதி புத்திசொல்லிப் - பரிபாஷை யவர்களிடங் கொடுத்தார்பாரே. (31)

கொடுத்ததொரு சாஸ்திரத்தை யவர்கள்வாங்கிக் - குகைதனிலே வெகுபதனம் பண்ணிக்கொண்டு, அடுத்ததொரு பிள்ளைகட்கு அறிவித்தேதான் - ஆகாத பிள்ளைகட்குக் கொடுக்கொண்ணுது, தொடுத்ததொரு சாஸ்திரத்தை உலகமீதிற் - தோணுமல் வெளிவிட்டோர் நரகில்வீழ்வார், படுத்ததொரு பாசவினை மாயைக்குள்ளே - பண்பட்ட பேர்களுக்குக் கொடுக்கொணுதே. (32)

கொடுக்கொணுச் சாஸ்திரமிது அருமைமெத்தக் - கூறியதோர் சாஸ்திரங்கள் போலேயல்ல, தொடுக்கொண்ணுச் சாஸ்திரம்வைத் திருந்தபேர்க்குத் - தொண்டுபண்ணி அவர்மனம்போல் நடக்கவேணும் எடுக்கொணுப் பிள்ளையது வந்தடுத்தால் - இருந்துபார் பதிஞறு ஆண்டுமட்டும், கடுக்கொண்ட பிள்ளையென்ருல் சாஸ்திரமீய்ந்து - கனிவான சித்தினுட மகிமைசொல்லே. (33)

சீஷநக்குபதேசிக்க.

சொல்லடா ஞானமதை முன்னேசொல்லு - துடியான கற்பமதைப் பின்னேசொல்லு, நில்லடா வாசிநின்ற யிடத்தைச்சொல்லு - நினைவுகொண்ட பிள்ளையென்ருல் வாதஞ்சொல்லு, கல்லடாபோலிருந்த மனமேயாஞல் - காட்டிடா யஷ்டகர்மக் கருவைச்சொல்லு, துள்ளடா வயித்தியத்தைச் சொல்லிவைத்துத் - துண்டுபடத் தானிருந்து சாதிப்பாயே. (34)

சாதிப்பாய் செந்தூரஞ் செய்யும்போது - தன்மையுள்ள சாரம்விட்டால் வலுவோயில்லை, சாதிப்பாய் கெந்திவிட்டாற் சிவப்பேருது - சனிகையென்ற நாதமது சேரவேணும், ஆதிப்பாய் மண் சிவந்த கைபாகத்தில் - ஆவதென்ன அதுபோலே யாகும்பாரு, சோதிப்பாய் செய்ததொரு செந்தூரத்தைத் - துடியான செம்பு வெள்ளி தன்னிலீயே. (35)

ஈயவே மருபிறவி நிறமேயானல் - எடுத்துப்பா ரதுவயதை நன்ருய்ச்சோதி, தய்யவே வலுவைநன்ரு யறிந்துகொண்டு - தான் கொள்ளு கற்பமது வலுவுமாகும், செய்யவே வலுவரியச் சொன்னதல்லால் - சீரறியா மக்களுக்குச் செப்பினேன்யான், உய்யவே சாரம்விட்டாற் சாரமில்லை - உத்தமனே செந்தூரம் வலுப்போகாதே. (36)

வலுவாகுஞ் சாரமங்கே சேர்ந்தபோது - மண்ணென்ற பூனீரு வலுத்துப்போகும், கொலுவாகும் பூமியுந்தான் யேத்திணுப்போல்- கொடிவீசும் பருவமதில் கொளுகிணுப்போல், மலுவாகுங் கலப்பாலி லுரைமோர் கொஞ்சம் - மாட்டிணுல் கல்லதுபோ லிறுகிப்போகும், தளுவாது அதுபோலே சாரம்விட்டால் - தட்டுண்டு போகுமடா சண்டிமாடே. (37)

வெள்ளைக்கல்லின் விபரம்.

மாடேகேள் வெள்ளைக்கல் லென்றபேரு - வையகத்திற் சித்தர்பல விதமாய்ச்சொன்ஞர், தேடேநீ பாஷையெல்லாம் நீக்கிநானும் - தெளிவாகச் சொல்லுகிறேன் நன்ருய்க்கேளு, ஆடேநீ சிவந்தநிலந் தனில்வளர்ந்த-அப்பூடு சிறிதாக யிருக்கவேணும், கோடேநீ அப்பூட்டின் பூகங்கிள்ளிக் - கொண்டுவந்து சொன்னபடி நீயுஞ் செய்யே. (38)

சொன்னதுபோற் செய்யாம லிஷ்டம்போலே-துற்புத்தி யாய் நினைந்து செய்வீராகில், கன்னபோற் கற்பத்துக் காகாதுபார் - கனிவான வாதமது திடஞ்செய்யாது, உன்னதுபோல் வயித்தியத்துக் காகுமல்லால் - உதவாது சபலமில்லை தள்ளுதள்ளு, விண்மில்லாச் சிவந்தநிலந் தனிற்முளைத்து - மேலான ஏகமென்ற வயது மாமே. (39)

வயதாகு மதுமிஞ்சி வளர்ந்தபூடு - மருந்துவகைக் காகுமல்லால் மற்றென்றுக்காகா, பயசாகு மிதுபோலே முடியுமாகும் - பண்பான புளியாகு மமுரியாகும், செயலாக அன்னத்தின் சாரஞ் சேர்ந்தால் - செயமாக மாட்டாது செய்ததெல்லாம், வயலாகப் பூமியுப்புச் சேர்ந்தபோது - மண்ணுச்சு பொன்காணேன் மருவிப்பாரே. (40)

மருவிப்பார் பூமிசிவப் பாகவேணும் - வளர்ந்ததொரு பூமே ங்கே சிவப்பேயானல், கருவிப்பார் அன்னசத்து யேறலாகா-கண் மணியே உதிகாலின் பருவம்பார்த்து, சருவிப்பா ரண்டமொடு சுண்ணம்பண்ணு - தான்வளர்ந்த கேசமொடு சுண்ணம்பண்ணு, திருவிப்பார் புளியெடுத்துச் சுண்ணம்பண்ணு - நீர்வாங்கி அமுரி யுப்பு நிணைவாய்ப்பண்ணே. (41)

உப்பின் பேயர்.

நிணைவாக அமுரியுப்பு சிவஉப்பாச்சு -நின்றபுளியுப்புமிது சத் தியாச்சு, குணமாக முடியுப்பு யீசனுச்சு - குண்டமென்ற அண் டவுப்பு மாலினுப்பு, மனமாகப் பிண்டவுப்புப் பிரமஉப்பு - மாட் டினுற் கற்பமது வரிசையாகும், இனமாகச் சேர்ந்ததெல்லாந் தங்க மொன்று - எடுபணிகள் பலவிதமாய் முடியும்பாரே. (42)

பூனீரேடுக்க.

முடிவான கருவொன்று சொல்லக்கேளு - முத்தியென்ற கரு வப்பா முதற்காண்டத்தில், வடிவான தலமெல்லாம் வகுத்துச் சொன்னேன்-வஞ்சகமா யெடுக்கும்வகை சொல்லவில்லை, துடியா ன நாள்சொன்னேன் திதிராசிசொன்னேன் - தோண்டியெடுக் கும் போது பூசைசொன்னேன், குடியான சத்திசிவ மில்லாவிட்டால்- கூறியதோர் சொல்லெல்லாம் பொய்யாய்ப்போச்சே. (43)

பொய்யாது பூமியுப்பு மண்தானுகும்-போக்கறியா மாடுகளே தண்ணீ ருப்பு, மெய்யாக யெவ்விதமாய்ச் சொன்னு லுந்தான் - வினையம்வைத்துப் பார்த்தவர்க்குத் தோணுமல்லால், கய்யாரச் சத்திசிவங் காணவென்றல் - கண்கூசும் நீலவர்ணம் சத்தியாச்சு, செய்யாரச் சலமானல் வெள்ளையாச்சு-செடிமாரல் நீர்வாங்கிச் சுத் திபண்ணே. (44)

சுத்திபண்ணு பத்துமுறை தீட்சையானுற்-சொல்லவொண்ணு திறங்காணும் மகிழ்ந்திடாதே, சத்தியமாய் நீயிருந்து பூசைதீர்ந் தால்-சகலசித்துங் கைவசமாம் பூசைமறவாதே, நித்திரைகள் செய்யாதே பலநினைவைவிட்டு - நிசம்வைத்துச் குருபதமே கெதி யென்றெண்ணி, பத்தியுடன் தானிருந்து ஆசைநீக்கிப்-பராபரை யாள் பாதமது பணிகுவாயே. (45)

பணிவாகும் மிதந்தபுத்தி வேளை தன்னிற் - பார்மகனே சித்தர் வந்து சோரஞ்செய்வார், கனிவாகுந் தேவியுமே கடக்கநின்று - கைபாகஞ் செய்பாகங் காணுமற்றுன், மணியான விதியில்லை யெ ன்றுசொல்லி - மாருட்டஞ் செய்திடுவார் வகைதோணுமல், சனி யான கூற்றனவன் பிடரிநின்று - தப்பிதங்கள் செய்துவைப்பான் தன்னைமறவாதே. (46)

மறவாமல் நேமநிஷ்டை செய்துகொண்டு-மாதாவை யிருதய மாய் மனதில்வைத்து, சுரமான வாசியைத்தா னுள்ளேவாங்கிச்-சராசரமெல் லாம்படைத்த தாயைப்போற்றி, குரமான சிவபூசை குருவின்பூசை - கொண்டதொரு ருத்திரனுட பூசைதானும், பரமான சொர்னவயி ரவர்தன்பூசைப்-பண்பாகச் செயதுகொண்டு குடுசுபோடே. (47)

பூனீரெடுக்கும் நேரம்.

போடடா அவ்விடத்திற் குடுசுபோட்டு-பூரணச்சந் திரனுக்கு முன்னேஐந்து, தேடடா தீபமுடன் தூபங்காட்டித்-தேவியென் றயீஸ்வரியைப் பூசைபண்ணு, நாடடா பச்சியுடன் வேளைபார்த்து-நாடுவா யப்பூடு பூத்தபூவை, மூடடா சிப்பிகொண்டு யிருவிரல் மேலெடுத்து-முத்திபெற்ற பூவையெல்லாந் துண்டாய்வையே. (48)

வையப்பா ரவிகண்டால் நன்றாய்ப்பார்த்து-வளமான வெள்ளையெல்லாந் துண்டாய்வைத்து, செய்யப்பா மஞ்சள்நிற மானதெல்லாம்-தெளிந்தெடுத்து மறுயேனந் தன்னில்வைத்து, கொய்யப்பா குருவைவைத்துப் பூசைபண்ணு-கோதையுட கிருபையினாற் கிழங்குவாங்கு, மெய்யப்பா அந்தநிலந் தன்னிற்றானும்-வேணபடி சோதனைக ளுண்டுபாரே. (49)

உண்டுபார் கெந்தகமும் விளையும்பூமி-ஊணுரவி மீனமுடன் மேஷம்வந்தால், கண்டுபார் கெந்தகந்தா னுருகியங்கே-கனமான லோகத்தில் நிற்கும்பாரு, விண்டுபார் பூணுதம் பொட்டினுதம்-வேணபடி கல்நாதம் பொங்கிமேலும், கொண்டுபா ரிந்தவகை யடங்கியுள்ளே-குளேவான கெந்தகநீ ரிமூக்கும்பாரே. (50)

பாரடா அதுமட்டோ பூமிநாதம்-பண்பான பனிநீரு மிழுக்கும்பாரு, சேரடா ரவிதனிலே உள்ளேகொள்ளும் - சென்றவுடன் மாதமது பத்துமாகி, வாரடா அந்தநிலங் களிம்புபோக்கி-வளமான தங்கமென்ற வர்ணமாகும், நேரடா அந்தஉப்புச் சொர்னமென்று-நீள்புவியிற் சித்தரெல்லா மறைத்தார்பாரே. (51)

மறைத்தாரே யிந்தவுப்பு யெடுக்கும்மார்க்கம் - வையகத்திற் சித்தரெல்லாஞ் சொல்லவில்லை, குறைத்தாரே கைபாகஞ் செய்பாகங்கள்-குணங்குறிகள் நிரைபாகங் கணக்கின்பாகம், இறைத்தாரே தில்லையென்ற நாதரங்கே-இல்லாமல் மாத்துவந்த வாரதெங்கே, கறைத்தாரே பூனீரு யில்லாமற்றான்-காணாது கக்கினது கண்டுகொள்ளே. (52)

சுத்திசிவநீல அடையாளம்.

கொள்ளுவது யின்னமொரு சூட்சஞ்சொல்வேன்-கோதையுட கிருபையினால் நன்றாய்க்கேளு, அள்ளுவது பூத்தநிலந் தன்னிற் றானும்-அப்பனே பூச்செடியின் கிழங்கில்லாட்டால், துள்ளுவது வெளிக்கருவின் மூலமப்பா-சொல்லாமற் செய்ததொழி லெல்லாம் பொய்யாம், மல்லுவது ரவிமதியு மிருந்தநிலந்தன்னில்-மக்களே அடையாளஞ் சொல்லக்கேளே. (53)

சொல்லக்கேள் நாதவிந்து யிருப்பின்மேலே - சுருண்டுநிலம் வலம்புரிபோற் றோணும்பாரு, அல்லக்கே ளந்தநிலந் தன்னிற் றானும்-அப்பனே சொர்னமென்ற பூச்சியுண்டு, விள்ளக்கே ளந்திடத்திற் பூச்சிகொண்டு-மேன்மையுள்ள மண்ணெல்லாஞ் சிவப்பாய்த்தோணும், கொள்ளக்கே ளவ்விடத்திற் சுத்திசிவபூசை - கொடுமையுள்ள ருத்திரபூசை முடிப்பாய்நீயே. (54)

பூசைசெய்து திசைக்கட்டு ருத்ரனாலே-புண்ணியனே செய்து கிழங் கெடுக்கும்போது, ஆசைசெய்து சொர்னவயி ரவனைக்கொண்டு-அப்பனே வஸ்துசுத்திப் பூசைசெய்து, பாஷைசெய்து பலி கொடுத்துக் கிழங்குவாங்கு-பனிநீரிற் சுத்திசெய்து ரவியில்வைத்து, மோசமது போகாதே மூன்றுநாளும்-மொய்குழற்குப் பூசை செய்து பசளைநீர்வாங்கே. (55)

பசளையுட நீர்வாங்கி மூன்றுநாளும்-பாய்ச்சடா ரவியில்வைத்துச் சுண்டக்காய்ந்தால், குசளையுட குடத்துநீர் விட்டுநன்றாய்க்-கொடுரவியில் நவநாளும் வைத்துப்போற்று, கசளையுட சுண்ணமதைப் பதனம்பண்ணு-கட்டியதோர் சாஸ்திரத்தின் தொழிலுக் கெல்லாம், முசளையுட சுண்ணமதி லணுத்தொட்டாக்கால்-மோசம்போ காதுகுரு காரந்தானே. (56)

காரமடா வீரமுடன் பூரஞ்சேரு - கனிவான சூடனுட னூரமுஞ்சேரு, பாரமடா வகையொன்று பலமுமொன்றாய் பதிவாகச் சுண்ணமது பத்துக்கொன்று, நேரடா பசளைநீர் விட்டுக்கிண்டு - நீமகனே கடுரவியில் வைக்கும்போது, சாரமடா மூன்றுநாள் வைத்தெடுத்தால்-தன்மையுள்ள குருவாச்சு தப்பாவாரே. (57)

தப்பாது யிப்பாடியே குருமுடித்துச் - சாஸ்திரத்தில் சொன்னபடி சாதித்தாக்கால், தப்பாது பெரியோர்கள் சொன்னவாக்யம் - தான்செய்யத் தெரியாமற் தவறிப்போனால், தப்பாதோ சாஸ்திரம்பொய் யென்றுசொன்ன - சண்டாளப் பயல்களுக்குத் தவறிடாதோ, தப்பாதோ நினைத்ததெல்லாந் தவறிப்போகும் - தப்பாதே செய்தோர்க்குக் குருவுமாமே. (58)

குருவின் லட்சணம்

குருவென்று சொல்வதைத்தா ஞரைமைந்தா - குருமுடிக்கும் பெரியோரே குருவுமாகும், குருவென்று சொல்வதைத்தா ஞரை மைந்தா-கூடழியா வைத்திருந்தோன் குருவேயாகும், குருவென்று சொல்வதைத்தா ஞரைமைந்தா - குவிந்தெழுந்த வாசிநிலை கண்டவனுங்குருவாம், குருவென்று சொல்வதைத்தா ஞரைமைந்தா - குவலையத்திற் பாசவினை யகற்றினவன்குருவாம். (59)

குருவென்று சொன்னரே நூல்கள்தோறும் - குணமான பூநீற்றின் பெருமைதன்னை, மருவென்ற கருவழலை யொளித்துவைத்தார் - மக்களே சொல்லுகிறேன் கனிவாய்க்கேளு, கருவென்ற கருவழலைக் கருவேதென்றால் - கண்மணியுட் கொடியொன்று மேல்மூடியொன்று, தருவென்ற ஒட்டியொன்று மூன்றுஞ்சேர்ந்தால் - தன்மையுள்ள கருவெல்லாம் விளங்குந்தானே. (60)

விளங்குதற்குக் கருவதனைச் சொல்லக்கேளு-வெகுவிதமாய்ச் சிவந்தநிற மானதாக, தளங்குகின்ற தத்துவமுங் குறையில்லாதாய்த்-தயவாக ஆதல்யிரு பதுக்குள்ளாக, முளங்குதற்குக் கோட்டமில்லா திருப்பதாக - முதல்கருவாய்க் குவியலில் வீழாதெடுத்து, மளங்குதற்கு யிளங்குமரி யிட்டதின்வேர் - மைந்தனே யெடுத்திடவும் வகையைக்கேளே. (61)

வகையென்ன கிளத்திரியில் வருகும்போது - மக்களே தபிசு போய் வருகவேணும், துகையென்ன ரவியாக யிருக்கவேணும் - தொட்டதே தாலிகையா யிருக்கவேணும், பகையென்ன பூருவமா யாதிநாளாய்ப்-பஞ்சமியுந் தசமிஅமா வாசியாக, நகையென்ன ரவிநாளாய்ப் பதினைந்துக்குள் - நழுவிவருங் கிழங்கதனை யெடுத்திடாயே. (62)

எடுத்துமே பிரமமென்ற பிண்டந்தன்னில் - எடுத்துமே ஊசிநீர் தன்னைவாங்கி, கொடுத்துமே பால்காய்ச்சுஞ் சட்டிதன்னிற் - குபீரெனவே கிழங்குதனை யதற்குள்வைத்து, படுத்துமே ஊசிநீர் முங்கவிட்டுப்-பாலகனே மேற்சட்டி கொண்டுமூடி, அடுத்துமே மண்சீலை வலுவாய்ச்செய்து-அப்பனே நாள்மூன்று சென்றுவாங்கே. (63)

வாங்கியே வாலுகையில் வைக்கும்போது - மக்களே சத்தியுடபூசைசெய்து, தூங்கியே திரியாமல் சிவபூசைசெய்து - துடியான ருத்திரனுட பூசைசெய்து, தாங்கியே சொர்னவயி ரவபூசை செய்து - தப்பாமற் செய்துகொண்டு ரவியைமூட்டு, ஏங்கியே புங்கம்வேர் தன்னாற்றீதீயை - எரித்திடுவாய் விளக்கொளிபோல் சாமம் ரெண்டே. (64)

ரெண்டான சாமமுமே சென்றபின்பு - நிறுத்திவைத்து அன்லேயுமே நிறுத்திக்கொண்டு, குண்டான மறுநாள்தான் தீயைமூட்டு-குளுந்தஅனல் கொண்டெரிப்பாய் சாமமூன்று, வண்டான மறுநாளும் அனலேமூட்டி - வைத்தவைப்பாய்க் குளம்புபோல் வருதல் கண்டு, விண்டான குளம்புபத மென்னவென்றால் - வெடியான வெண்ணெய்ச்சுடர் வாசந்தானே. (65)

வாசமது கண்டவுட னணலவித்து் - வளமாகக் குளிரவைப்பாய் நாள்மூன்றப்பா, நேசமது சென்றபின்பு யெடுத்துவாங்கி - நினைவாகக் கவசமதை யெடுத்துப்போட்டு, பாசமது கடுரவியில் பீங்கானில்வைத்து - சதனமதா யருகிருந்து கிண்டும்போது-தோசமது தான்விலகக் காய்ந்துதானால் - சொர்னமென்ற மெழுகாச்சு பதனம்பண்ணே. (66)

பதனமடா யிக்கருதான் உட்கருவாம்பாரு - பார்மகனே வெளிக்கருவில் பத்துக்கொன்று, சதனமடா யிக்கருவை பசளை நீரில் - தான்கலக்கி ரவிமுகத்தில் சதிருய்வைத்தால், விதனமடா தீர்க்குகின்ற சுண்ணமாகும் - வெகுபதனம் வெகுபதனம் பண்ணி வைப்பாய், அதனமடா சுண்டினபின் னெடுத்துப்பாரு - அப்பனே கடுங்காரச் சுண்ணமாமே. (67)

சுண்ணமடா நவநாளுஞ் சென்றபின்பு-சுந்தரமே யென்மகனே சொல்லக்கேளு, கண்ணமடா பழச்சாறு விட்டுக்கிண்டி - கடுரவியில் நவநாளும் வைத்தெடுத்தால், சொன்னமடா துரைகோடி தொந்தங்கோடி - தொட்டவிடம் பட்டவிட மெல்லாம்பொன்னும், இன்னமடா தொந்தம்வெகு தொந்தமுண்டு - யென்கனே வகையாகச் சொல்லுவேனே. (68)

சொல்லுவே னிதற்குநிக ரசமுஞ்சேரு - துடியான வீரமொரு பாதிசேரு, செல்லுமே நாகமது சுத்திசெய்து - சென்றிடைக்குச் சரியிடையாய்ச் சேர்த்துக்கொண்டு, கொல்லுவேன் சிறுபசளைச் சாறுவிட்டு - குளையநல்லா யரைத்துவில்லை நன்றாய்க்காய்ந்தால், வெல்லுவேன் ஒட்டில்வைத்து ஓடுமூடி - வெகுவிதமாய் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (69)

செய்துகொண்டு சிறுபுடமாய் வைத்தெடுத்துத்-தேவியென்ற மனோன்மணிமுன் வைத்துப்போற்றி, நய்துகொண்ட கல்வமதிற் போட்டுப்பின்பு - நன்றாகப் பழச்சாறு விட்டுஆட்டி, கொய்துகொண்ட சாமமுமே யெட்டுமானால் - கூடியே வில்லைதட்டிக் காயவைப்பாய், நொய்துகொண்ட ரவிமுகத்தில்வைத்துக்காய்ந்தால்-நோக்கியே முன்போலே புடத்தைப்போடே. (70)

போடடா முன்போலே புடத்தில்நீயும் – போட்டெடுத்துக் கல்வமதிற் பேர்டும்போது, நாடடா யிந்திடைக்குக் கெந்திபாதி – நலமான தாளகமும் பாதிசேரு, கூடடா குமரிச்சாறு விட்டுஆட்டிக் – கூடியொன்ருய் வில்லைதட்டி ரவியில்வைப்பாய், தேடடா வில்லை யங்கே நன்ருய்க்காய்ந்தால் – தேன்மொழிக்குப் பூசைசெய்து வைத் துப்போற்றே. (71)

போற்றியே வில்லைதனை யெடுத்துக்கொண்டு – புண்ணியனே ஒட்டில்வைத்து ஓடுமூடி, பாற்றியே சீலைமண் வலுவாய்ச்செய்து– பதிவான யிடந்தனிலே புடத்தைப்போடு, சாற்றியே புடம்போ டும் போதெல்லாந்தான் – தாமென்ற மனோன்மணியைப் பூசைசெ ய்து, வாற்றியே புடமாறி யெடுத்துப்பாரு – மக்களே கண்கொள் ளாச் சிகப்பாம்பாரே. (72)

சிகப்பான செந்தூர மென்னசொல்வேன் – தேவிபரா பரையி னுட கிருபையாலே; முகப்பான செந்தூரங் கல்வத்திட்டு – முக் கியமுள்ள பரியதிலே நாலுக்கொன்று, நகப்பான குமரிச்சாறு சாமம்ரெண்டு – நன்ருக விட்டரைத்துக் காயவைத்து, பகையான கல்வமதிற் பொடித்துக்கொண்டு – பார்மகனே செம்பரத்தம் பூச் சாறுதானே. (73)

தானான செம்பரத்தம் பூச்சாறுதானும் –தப்பாமற் சாமமது ரெண்டேயானல், தேனான கல்வமதிற் காயவைத்துச்–சென்ற பின்பு முருக்கம்பூச் சாறுவிட்டு, கோனான சாமமது நாலேயானல் கூட்டியொன்ருய் வில்லைதட்டிக் காயவைத்து, வானான ஓட்டில் வைத்து ஓடுமூடி – மக்களே சீலைமண்ணும் வலுவாய்ச் செய்யே ()

செய்யப்பா புடம்போட்டு யெடுத்துக்கொண்டு–தேவியென்ற ஈஸ்வரிக்குப் பூசைசெய்து, மெய்யப்பா செந்தூரம் பணவிடை கால்கொண்டால் – மேனியென்ற தேகமது தங்கம்போலாம், கையப்பா நரம்புகளும் முறுக்குமேறும் – கண்சிவக்குந் தாதுபல மாகும்பாரு, நொய்யப்பா கழண்டதொரு தேகந்தானும் – நோ காம லிறுகியது கற்றாணுமே. (75)

கற்றாணு மண்டலந்தான் கொண்டாயானல் – கசடத்துத் தகேமது வலுத்துப்போச்சு, கற்றாணு மேமனென்ற பயமும் போச்சுக் – கற்பமென்ற திதுவாச்சு கலக்கம்போச்சு, கற்றாணும் நரைதிரையு மாறிப்போச்சு – கற்பாந்த காலமெல்லா மிருக்கலாச்சு, கற்றாணுஞ் செந்தூரப் பெருமைதன்னைக் – காட்டுகிறோம் வகை தோணக் காட்டுறோமே. (76)

காட்டுகிறோம் வெள்ளிசெம்பில் நூற்றுக்கொன்று-கட்டாகக் கொடுத்திடவே யீரெட்டாகும், மூட்டுகிறேன் மாத்ததுவை யென்ன சொல்வேன் - முக்கியமுள்ள கிளியிறகு போலேபச்சை, வாட்டுகிறோ மிதுக்குநிக ராணியுண்டோ - மக்களே விலையதிகஞ் சொல்லப்போமோ, தேட்டுகிறோம் வருஷமொன்று செந்தூரந்தானும்-தின்றுவிட்டால் தேகம்வச்சிர காயமாமே. (77)

காயமடா வெளிக்கருவும் உட்கருவும்நன்றாய்க் - காட்டினே மின்னமொரு கருவைத்தானும், மாயமடா சொல்லவில்லை மக்காள்கேளு - மறைத்துவைத்தார் சித்தரெல்லாம் வகைதோணுமல், நேயமடா நந்திசொன்ன முன்னூறு தன்னில்-நிகழ்த்தினர் கருவை நன்றாய் வெளியாய்த்தோண, உபாயகரு வழலைவிரை யில்லாவிட்டால் - உத்தமனே சொன்னதெல்லா முன்பின்னுமே. (78)

முன்னான கருவைபங்கே யெடுத்துக்கொண்டு-மூட்டடா உட்கருபோல் முறையாய்ச்செய்து, கண்ணான தொழில்களெல்லாங் கொஞ்சந்தொட்டுக் - காட்டினல் சாஸ்திரம்பொய் யாகாதப்பா, விண்ணான உட்கருவின் மூலமப்பா - வெளிக்கருவின் மூலமப்பா முன்னேசொன்னேன், சன்னசி தவமுனிவர் சித்தரெல்லாம்-தான் மறைத்த பொருளிரண்டும் வெளிசொன்னேனே. (79)

சொன்னேனே கருவையெல்லாம் வெளியதாகச் - சொன்ன தினற் குகைதனிலே யிந்தநூலை, பன்னேநீ யென்றுசொல்லிச் சித்தர்சொன்ன-பதிவையெல்லாம் நானவர்க்கு உபசாரஞ்செய்து, கண்ணேநீ சாஸ்திரத்தை வாங்கிநல்லோர் - கரையேற வேணுமென்று யிரக்கங்கொண்டு, முன்னேயிந் நூல்கண்ட பெரியபேர்கள் மொழிதப்பிச் சாஸ்திரத்தை வெளிவிடாரே. (80)

வெளிவிட்டா லுன்குலங்க ளற்றுப்போகும் - வெள்ளிடியும் உன்தலையில் விழுகும்பாரு, துளிவிட்ட கருவுகளை மனமறியச் சொன்னல் - துடர்ந்திடுமே யெழுபிறப்பும் நரகில்வீழ்வாய், வளிவிட்ட பெரியோர்கள் வந்தாரானல் -மனம்நின்று நிலையவர்க்குத் தெரியும்பாரு, சுளிவிட்ட விதியாளி யென்றுசொல்லித்- தோணுமடா அவர்க்குஉப சாரஞ்செய்யே. (81)

செய்யடா சித்தர்வந்து மாயை செய்வார் - திறமாக ஓர்மனது கொண்டுநில்லு, கய்யடா சித்தரிடம் பிச்சைகேட்டுக்-கண்மணியே அவருடைய வாக்குப்பெற்று, நெய்யடா தொழிற்செய்யும் போது மக்காள்-நிழல்பட்டால் கருவெல்லாம் சித்தியில்லை, பய்யடா உன்னிழலும் படக்கூடாது-பட்சிபறவைநிழலும் படக்கூடாதே. (82)

கூடாதே வெளிக்கருவும் உட்கருவுமப்பா - கொண்டுசெல்லும் போதெல்லாம் சிந்தையதின்பேரில், தேடாதே பலநினைவை மனதில்வைத்தால் - சித்தர்வந்து கருவையங்கே சோரஞ்செய்வார், நாடாதே அவர்பதமே தொண்டுசெய்து - நல்லவரைப் போற்றியே நயந்துகொண்டு, மூடாதே அவர்க்குஉப சாரஞ்செய்து - முத்திபெறக் கருவையங்கே தொட்டுவாங்கே. (83)

வாங்கியே தனித்திருந்து தொழிலைச்செய்து - வையகத்துப் பெரியோர்க்குத் தொண்டுசெய்து, ஏங்கியே வந்தவர்க்கு அன்னமீய்ந்து - இருந்துண்பான் பரதேசி யெளியோர்க்கெல்லாம், தாங்கியே யெவ்வுயிற்கு மிரங்கியேதான்-சச்சுதா னந்தமென்ற குருவை நோக்கி, பாங்கியாம் மனோன்மணியைத் தாயே யென்று - பரம குரு பாதமதைத் தியானஞ்செய்யே. (84)

சிவமந்திரம்.

செய்யப்பா சிவத்தினுட மந்திரந்தான்கேளு - சீரான யென் மகனே கண்ணேசொல்வேன், செய்யப்பா தெங்கென்றுங் கிலிவாவென்றும்-செயங்கொள்ளப் பிரபஞ்சம் வாவாவென்றும், கையப்பா ஐயுமென்றும் ஸ்ரீறீங்கென்றும் - காமனையுந் தான்வென்ற ஈசுரவாவா, நொய்யப்பா நூற்றெட்டு உருவேயானால் - நோக்குமுன்னே சிவனங்கே வருவார்பாரே. (85)

சத்திமந்திரம்.

பாரப்பா சிவபூசை செய்துகொண்டு - பண்பான தேவிமந்திரம் பகரக்கேளு, ஆரப்பா அறிவார்கள் அறிவோமென்று - அப்பனே ஸ்ரீசிரீங்சிவயவசி வாவாவென்று, நேரப்பா சிவரூபி வாவாவென்று - நேர்மையுட னேர்மனதாய் நூற்றெட்டானால், காரப்பா சத்திசிவம் ரெண்டும்வைத்துக் - கருணைபெறத் தொழில்முகத்திற் பூசைபண்ணே. (86)

சோர்னவயிரவமந்திரம்.

பண்ணப்பா சொர்னவயி ரவன்றன்பூசைப் - பாங்கான மந்திரத்தைச் சொல்லக்கேளு, எண்ணப்பா ஓங்கென்றும் ஸ்ரீங்கென்றுந்தான் - என்முன்னே சொர்னரூபா வாவாவென்றும், கண்ணப்பா நானெடுத்த கருவெல்லாந்தான்-கைவசமாய்ச் செய்துவைக்க வாவாவென்று, சண்ணப்பா நூற்றெட்டு உருவேயானல்-தன்வசமாய்ப் போகுமடா தான்பார்ப்பீரே. (87)

தான்பார்க்குந் தொழிற்கெல்லாம் வயிரவனும்வேணும் - தன்மையுடன் தொட்டதெல்லாம் பலிக்கும்பாரு, மான்பார்த்த சிவகிருபை யிருந்துதானல் - மக்களே செய்தொழிலும் பங்கமாமோ, கோன்பார்த்துக் குருமுடிக்க அறிவில்நின்று - குணங்குறிகள் தவறாமல் மனதிற்ரேணி, வான்பார்த்த கருவெல்லாம் வெளியதாக - மக்களே தோணுமடா மகிழ்ந்துபாரே. (88)

பாரடா தவமுனிவர் சித்தரெல்லாம் - பண்பாக மறைத்த
தென்ன உட்கருவின்மூலம், நேரடா வெளிக்கருவின் மூலந்தா
னும் - நெகிழாமற் பலவிதமாய்ச் சொல்லிவைத்தார், காரடா யிக்
காண்டந் தன்னிற்றானும் - கண்மணியே காணுதற்கு வகையாய்ச்
சொன்னேன், ஆரடா அறிவார்கள் குருசொல்லவேணும் - அல்
லாதா லின்னாலே சொல்லும்பாரே. (89)

சொல்லுவது கருவைநன்றாய் வினையம்வைத்துச் - சோராமற்
கருவெடுத்து தொழிலைச்செய்தால், மல்லுவது நீயுமொரு சித்த
னுவாய் - மக்களே பிரபஞ்ச மாயைபோச்சு, அல்லுவது தவ
முனிவரென்றபேரும் - அப்பவல்லோ வாய்க்குமடா அறிந்துபாரு,
கொல்லுவது கூத்தனென்ற யெமனும்போனன் - கூடுதனில் விளை
யாடும் பூதமஞ்சே. (90)

அஞ்சான பூதமங்கே அழியாதப்பா - ஆனந்த சிவரூப மாகும்
பாரு, மிஞ்சாது பிரபஞ்சம் பொய்யென்றெண்ணி - மெய்யான
வாழ்க்கையிலே மேவிநின்று, துஞ்சாமல் மலைதோறும் வாசமாகிச்-
சோதிமய மானசித்தர் பாதம்போற்றி, நெஞ்சார ஊழிவரை யிரு
ந்துகொண்டு - நேமநிஷ்டை மறவாம லிருப்பார்பாரே. (81)

இருப்பதற்கு யிக்கருவை வெளியாய்ச்சொன்னேன் - ஏழை
மதி போகாதே யிறந்திடாதே, மருப்பதற்கு யிச்செனனம் பிறப்
பதுதானரிது - மக்களே வாய்த்ததென்றால் வாழ்வதுதான்பெரிது,
பருப்பதற்கு உண்டுடுத்தி வாழ்ந்தபேர்கள் - பாழ்நரகில் வீழ்ந்து
உடல் பாழாய்ப்போகும், செருப்பதற்கு ஆசைமிஞ்சிப் பொருளைத்
தேடும் - செத்தபின்பு சீரழிவு மெத்தக்காணே. (92)

காணடா பொருளறிந்து தேடவேணும் - கண்மணியே பொரு
ளறியா மாடுமெத்த, வீணடா செத்திறந்து போவதற்கோ - வெளி
யிட்டே னிக்கருவை மேதினியிற்றானும், சாணடா வயிற்பிழைக்
கச் சண்டிமாடே - சாகாமலிருக்கவல்லோ சாஸ்திரங்கள் சொன்
னேம், கோனடா செத்தவர்க்குப் பெண்டுபிள்ளை - கொடுப்ப
தென்ன வாங்கினது கண்டிலேனே. (93)

கண்டிலே னென்மகனே சுந்தரமேகேளு - கண்மணியே சாஸ்
திரத்தில் வினையம்வைத்து, கொண்டிலேன் பேரின்ப வாழ்க்கை
தேடிக் - கூடுதனை யழிக்காமல் முத்திபெற்று, பண்டிலேன் முத்தி
பெற்ற பேரைக்கண்டு - பணிந்திடுவா யவர்பின்பு தொடர்ந்துகூடி,
விண்டிலேன் சடலமழி யாமற்றானும் - மேதினியிற் சித்தர்களு
மெச்சினரே. (94)

மெச்சினார் கரைகாணாச் சாஸ்திரங்கள் - மெத்தவுண்டு சித்தர் முனி மறைத்ததெல்லாம், மெச்சினார் பதினெண்பே ரிந்தநூலை - மேன்மையுள்ள பெரியோர்க ளடக்கஞ்செய்தார், மெச்சினார் தவ முனிவர் சித்தரெல்லாம் - விளங்கியதோர் நூல்களுக்குத் திறவு கோலாம், மெச்சினா ரிந்தநூல் கண்டபேர்கள் - விதியுள்ளோ ரென்றுசொல்லி மெச்சினாரே. (95)

மெச்சியதோ ரிந்தநூல் பதனம்பண்ணு - வெகுபதனம் வெகு பதனம் சொன்னேன்சொன்னேன், மெச்சியதோர் நூலதனை வெளிவிட்டோர்க்கு - வெள்ளிடிதான் விழுந்துதலை தெறித்துப் போகும், மெச்சியதோர் நூலதனை யடக்கஞ்செய்தோர்-மேன்மை பெற்று ஞானநெறி விளங்கும்பாரு, மெச்சியதோர் நூலதனை வினை யம்வைத்து - வெகுவினையம் வைத்துப்பார் முத்தியாமே. (96)

முத்தியாம் சித்தியாந் தொட்டதெல்லாம்-மோட்சகெதி யுண் டாகு முன்னோர்சொன்னார், புத்தியாங் கருமறைப்பு வெளியாய்த் தோன்றும் - பூதலத்தில் நீயுமொரு சித்தனாவாய், சத்தியாய் நின்ற தொரு ஜோதிபாதம் - தான்கிடைத்து ரவிமதியிற் சார்ந்துவாழ் வாய், பத்தியாய் நீயிருந்து உலகவாழ்க்கைப் - பழங்கதைபோ லாகுமென்று சடத்தைப்போற்றே. (97)

போற்றுவது உயிர்போலே யிந்தக்காண்டம் - பொன்கோடி யீந்தாலும் பொருள்சொல்லாதே, சாற்றுவது உன்தவசு நிறைவே யேறத் - தானவனாய் நீயிருந்து யிந்தநூலை, பாற்றுவது பயனறி ந்து பொருளைக்கண்டு - பரமகுரு பாதமது கெதியென்றெண்ணி, கூற்றுவனுந் தான்விலகக் குருமுடித்துக்கொண்டு - குருசொன்ன மொழிதவறா திருந்துவாமே. (98)

வாழ்வதுதான் பேரின்ப வாழ்வேவாழ்வு - வையகத்து வாழ்க் கையெல்லா மசகமாகும், வாழ்வதுதான் பேரின்ப வாழ்க்கையெ ன்றால் - வானமுதற் பூமியெல்லாம் வணங்கும்பாரு, வாழ்வதுதா ன் சத்திசிவம் ரெண்டில்நின்று - வளர்ந்தஉடல் வாழ்க்கையல்லோ வாழ்க்கையாகும், வாழ்வதுதா னிந்தநூ லைந்துகாண்டம் - வாழ் க்கையென்ற சிவயோகி வாழ்க்கைதானே. (99)

வாழ்க்கையென்ற சிவன்வாழ்க்கை சத்திவாழ்க்கை -வளமான மாலயனும் ருத்ரவாழ்க்கை, வாழ்க்கைபெற்ற பதினெண்பேர் வா ழ்க்கைவாழ்க்கை - மதிரவியும் நின்றஉடல் வாழ்க்கையாகும், வா ழ்க்கைபெற்ற குருசிஷன் பெற்றவாழ்க்கை - மனமகிழ்ந்து யான் சொன்ன கருவின்வாழ்க்கை, வாழ்க்கைபெற்றுக் கற்பமுண்ட பெரியோர்வாழ்க்கை-மனுநீதி பரிபாஷை வாழ்க்கைமுற்றே. (100)

தானென்ற உட்கருவின் மூலவாழ்க்கைத் - தாயான வெளிக் கருவின் தலத்தில்வாழ்க்கை, தேனென்ற ரெண்டினுட வாழ்க்கை யாலே - சித்தரிஷி தவமுனிவர் பெற்றவாழ்க்கை, மானென்ற சிவ சத்தி யானவாழ்க்கை - வையகமும் பிரபஞ்ச மானவாழ்க்கை, கோனென்ற யென்குருவுஞ் சிவனுஞ்சொன்ன - குருமுடிக்கும் பரி பாஷை வாழ்க்கைமுற்றே. (101)

—o—

அகஸ்தியர் பரிபாஷை 300

முற்றிற்று.

உ

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலயம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-
ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி

மதுரை யானைக்கல்தெரு வித்துவான் மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தச் சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

பரிபாஷையின் அறிவிப்பு.

இதற்கு முன்னர் அச்சிட்டிருக்கும் அகஸ்தியர் பரிபாஷை ஐநூறில், முதற்காண்டம் நூறும் இரண்டாங் காண்டம் நூறுமட்டுமே அகஸ்தியமுனிவரால் அருளப்பெற்றதென, பலஏட்டுச் சுவடிகள் மூலம் தெரியவருகிறது. மற்றும் மூன்றுகாண்டங்களிலுள்ள முந்நூறு பாடல்கள் இராமதேவர் திருவாய்மலர்ந்தருளியதை அத்துடன் சேர்த்து ஐந்து காண்டமெனப் பெயரிட்டு அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இப்பொழுது நமக்குக்கிடைத்திருக்கும் ஓலை ஏட்டுச்சுவடியினின்று அகஸ்தியர் பரிபாஷை ஐநூறில், மேற்கூறிய இரண்டு காண்டம் நீங்கலாக மீதி மூன்று காண்டங்களைத் தனியாகஅச்சிட்டிருக்கிறது.

சுமார் 100 வருடங்கட்கு முன் சில மகான்களிடமிருந்த ஏட்டுச்சுவடியில் அவ்விதம் இணைக்கப்பட்டிருந்தமையால் சேர்த்து அச்சிட்டிருக்கிறார்களேயொழிய வேறல்ல. தற்போது என்னிடம் அனேக ஓலை ஏட்டுச் சுவடிகள் கிடைத்தமையால் ஒன்றுக்கொன்று ஒத்துப்பார்த்து, ஒத்துமையாயுள்ள இரண்டுகாண்டத்தைநிறுத்தி மூன்றுகாண்டத்தைச் சுத்தப்பதிப்பாக அச்சிட்டு எவரும்வாங்கிப் பார்க்கும்பொருட்டு சொற்ப விலையே ஏற்படுத்தியிருக்கிறேன்.

எவரால் அருளப்பெற்றதென்றாலும் அனுபவத்திற்கும் முன் சொன்னவிஷயங்கள் பின்னால் முடிவடைந்திருக்கிறதாவென்றும் யூகித்தறிய வேண்டியதே நம் கடமை.

இங்ஙனம்,

☞ இ. ராம. குருசாமிக்கோன்.

புத்தக விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில், வயித்திய வாத சாஸ்திரங்களும் யோக ஞான சாஸ்திரங்களும் சுத்தப்பதிப்பாக என்னாலச்சிட்டுத் தயாரிலிருக்கிறது. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி வி. பி. யிலாவது நேரிலாவது கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரம்.

1.	அகஸ்தியர் பரிபூரணம் ௨௱௫-ம் அதற்கு சூஸ்திரம் ௨௰-ம்	0—4—0
2.	ஷை பூரணச்சூஸ்திரம் ௨௱௰௬	0—4—0
3.	ஷை வயித்தியத்தின் சுருக்கம் உரையுடன் ...	0—8—0
4.	ஷை. பரிபாஷை ௩௱	0-10—0
5.	ஷை செந்தூரம் ௩௱	0—8—0
6.	ஷை அமுதகலைக்யானம் ௲௨௱	1—0—0
7.	ஷை வயித்தியகாவியம் ௲௫௱	0-12—0
8.	சட்டைமுனிவர் முன்ஞானம் பின்ஞானம் ௨௱...	0—4—0
9.	பிர்மமுனிவர் வயித்தியம் ௩௱௮௰	0—8—0
10.	புலிப்பாணி வயித்தியம் ௫௱ உரையுடன் ...	0-10—0
11.	இராமதேவர் சிவயோகம் ௨௱	0—4—0
12.	சுப்பிரமணியர் ஞானம் ௨௱	0—4—0
13.	ஷை ஞானம் ௫௱	0-12—0
14.	கெருடாரூடம், கெருட பஞ்சாட்சர ஆரூடம், சத்தியாரூடம், சிவாரூடம், தேவியாரூடம், நாகராரூடம், சித்தராரூடம், சற்பாரூடம், மந்திராரூடம் முதலிய ஒன்பது ஆரூடம். வைத்திய, விஷ, மந்துர சக்கரங்களுடன்	1—8—0
15.	யோகஞான சாஸ்திரத்திரட்டு. ஒன்பது பாகம் வரை முடிந்திருக்கிறது. 1-வது திருமூலர் சுப்பிரமணியர் கோர்வையும், 2-வது போகர் காலாங்கி கோர்வையும், 3-வது கடைப்பிள்ளை புசுண்டர் கோர்வையும், 4-வது மச்சமுனி கோர்வையும், 5-வது சுந்தரானந்தர் கோர்வையும், 6-வது இராமதேவர் தன்வந்திரி கோர்வையும், 7-வது சட்டைமுனி கோர்வையும், 8-வது உரோமரிஷி கோர்வையும், 9-வது கருவூரார் கோர்வையுமாக அச்சிட்டிருக்கிறது. பாகம் 1-க்கு	1—0—0

☞ இ. ராம. குருசாமிக் கோன்,
புஸ்தகஷாப், புதுமண்டபம், மதுரை.